மலர்-2 இதழ்-27 அக்டோபர் 16-30 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



# புரட்டாசி சனிவிரதத்தின் மகிமைகள்

# பஞ்சபாண்டவர்களாக மாறிய இந்திரன்

## பாஞ்சாலி ஐவரை மணந்த ரகசியம் கூறும் மார்க்கண்டேய புராணம்

ஐந்து பேரை பாஞ்சாலி ஏன் மணந்தாள் என்ற கேள்வி வியாசரின் சீடராக, வியாசரோடு கூடவே இருந்த ஜைமினி முனிவருக்கும் ஏற்பட்டது.

மேற்கண்ட வினாவிற்கு விடையை மார்க் கண்டேயரை அணுகிக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி அவர் அறிவுறுத்தப்பட அவரும் மார்க்கண்டேய முனிவரை அணுகிக் கேட்டார்.

மார்க்கண்டேயரோ விந்திய மலையில் இருக்கும் நான்கு பறவைகளைக் கேட்கும்படி சொல்கிறார். அந்த நான்கு பறவைகளும் வேதம் ஓதிக் கொண் டிருந்தன. ஒரு முனிவரின் புதல்வர்களாக இருந்த அந்த நான்குபேரும் ஒரு சாபத்தால் பறவைகள் ஆகிவிட்டதாயும் கூறினார்.

அந்தப் பறவைகளிடம் சென்று ஜைமினி மஹாபாரதத்தில் உள்ள தன் சந்தேகங்களை ஒவ்வொன்றாய்க் கேட்டார். முதல் கேள்வியே பாஞ்சாலி ஐவரை மணந்தது குறித்துத் தான்.

அதற்கு அந்தப் பறவைகள்சொன்ன மறுமொழியாவது. தேவேந்திரனுக் கும் தேவகுரு பிரஹஸ்பதிக்கும் ஏற்பட்ட மனக்கசப்பில் பிரஹஸ் பதி மறைந்துவிட, தேவேந்திரன் குரு இல்லாமல் துவஷ்டாவின் மகன் விஸ்வரூபனைத் தன் குருவாய்க் கொண்டான். விஸ்வரூபனோ அசுரர் களிடம் பிரியம் உள்ளவன்.

ஆகவே தேவர்களுக்கான அவிர் பாகத்தில் ஒரு பகுதியை அசுரர்களுக்கும் அளித்து வர, இதைத் தெரிந்து கொண்ட தேவேந்திரன் விஸ்வ ரூபனைக் கொன்றுவிடுகிறான்.

கோபம் கொண்ட துவஷ்டா தன் ஜடாமுடியி லிருந்து விருத்திராசுரனை உருவாக்குகிறான். தேவேந்திரனை பழி தீர்க்க வந்த விருத்தி ராசுரனிடம் நட்புப் பாராட்டி நயவஞ்சகமாய் அவனையும் தேவேந்திரன் கொல்கிறான்.

இதன் காரணங்களால் தேவேந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொள்ள, அவன் பலத்தில் பாதி, யமன், வாயு, அஸ்வினி தேவர்களைச் சென்றடைகிறது.

அசுரர்களுக்கும், தேவர்க ளுக்கும் மீண்டும் போர் ஆரம்பிக்க மஹாவிஷ்ணு, கிருஷ்ணனாய் அவதரித்தார்.

அவருக்குத் துணையாக தேவேந்திரனைப் பாண்டவர்களாய்ப் பிறக்க வைத்ததாக ஐதீகம்.

அதன்படி தேவேந்திரனிடமிருந்த ஐந்து வித சக்திகளையும் தனித்தனியாகப் பிரித்து ஒவ்வொரு சக்தியையும் ஒரு மானுடனாக மாற்றி அவர்களை பஞ்சபாண்டவர்களாக மாற்றினார் கிருஷ்ணர்.

அதன்படி,

தேவேந்திரனின் பெருமை யுதிஷ்டிரனாகவும்,

பலம் பீமனாகவும்,

பாதி அம்சம் அர்ஜுனனாகவும்,

அஸ்வினி தேவர்களின் அழகு நகுல, சகாதேவர்களாகவும் பிறப்பு எடுத்ததாகச் சொன் னது அந்தப் பறவை. ஆகவே பாஞ்சாலி ஐவரைத் திருமணம் செய்து கொண்டதாய்ச் சொல்லப் பட்டாலும் அவள் திருமணம் செய்து கொண்டது ஒருவரைத் தான் என்றும் கூறியது. மேற்கண்ட செய்தி மார்க்கண்டேய புராணத்தில் கூறப்பட்டுள்ளது.





## நல்வினை தீவினைக்கு ஏற்றப்படும் தனித்தனி தீபங்கள்

தீபம் நல்ல காரியங்களுக்கும் பயன் படுத்தப்படுகிறது.கெட்ட காரியங்களுக்கும் பயன் படுத்தப்படுகிறது.

நல்ல தீபம் போடுவது எப்படி, அசுப தீபம் போடுவது எப்படி என்று தெரியுமா?

சுபகாரியங்கள் செய்யும் பொழுது முதலில் சுத்தமான எண்ணையை விளக்கினுல் உள்ளே ஊத்த வேண்டும் பிறகு தான் சுத்தமான திரியை நனைத்து அதன் பின் தீபம் ஏற்ற வேண்டும்

தீபம் ஏற்றும் போது தெரிந்த எதாவது ஒரு மந்திரத்தை உச்சரித்து கொன்டு தீபம் ஏற்றவேண்டும். அப்படி ஏற்றினால் ஒரு லட்சம் முறை மந்திரம் சொன்ன பலன் கிடைக்கும்.

கெட்ட காரியம், அதாவது வீடுகளில் ஏற்படும் அசுப நிகழ்ச்சி (இறப்பு போன்ற சம்பவங்கள்) ஏற்ட்டால் முதலில் திரியைய் வைத்து அதன் பிறகு தான் எண்ணெயை ஊற்ற வேண்டும் அதன் பின் தான் தீபம் ஏற்ற வேண்டும், அசுப சம்பவம் முடிந்ததும் அந்த தீபத்தை முச்சோந்தியில் போட்டு உடைத்து விட வேண்டும்.



# இறந்தவருக்கு உயிர் கொடுத்த மகான்

# ஏழுமலையான் பக்தனுக்கு

# நடைபெற்ற அற்புதம்

இறந்தவர்களை உயிர்ப்பித்த பல்வேறு கதைகளை இதிகாச புராணங்களில் கேட்டிருப்போம், அந்த வகையில் திருப்பதி செல்ல வழி தெரியாமல், தவறுதலாக கோவில் கிணறில் விழுந்து உயிர் துறந்தவரை உயிருடன் எழுப்பிய சம்பவம் 18ம் நூற்றாண்டில் நிகழ்ந்துள்ளது.

திருப்பதி திருமலைநாதனான ஏழுமலையானை தரிசனம் செய்துவிட்டு மகான் ஒருவர் திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியில் புத்தூர் என்னும் ஊருக்கு வந்தபோது, ஒரு தெருவிலுள்ள கோயில் வாசலில் சிலர் கூடி நின்றனர். அதில் ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள். இதைக் கண்ட மகான் தன் சீடனிடம் என்ன நடந்தது என்பதை அறிந்து வர அனுப்பினார்.

சீடனும் சென்று விசாரித்தான். “சுவாமி! மனைவியுடன் திருப்பதி சென்று கொண்டிருந்த பக்தன் ஒருவன், இருட்டில் வழி தவறி இங்கே வந்து விட்டான். அவன் வந்த சமயத்தில் எல்லா வீடுகளும் தாள் போட்டு மூடப்பட்டிருந்தது.

விலங்குகளின் நடமாட்டம் இருக்கும் என்பதால், அந்தக் காலத்தில் இருளில் கதவைத் தட்டினால் யாரும் திறக்க மாட்டார்கள். யாரும் திறக்காததால், பக்தர் இந்த கோயிலுக்கும் வந்து பார்த்தார். அதுவும் சாத்தப்பட்டிருந்தது.

வேறு வழியில்லாமல் சுவர் ஏறிக் குதித்து கோயில் கதவைத் திறக்க முடிவெடுத்தார்.

மனைவியிடம் சொல்லி விட்டு, கோயில் சுவர் ஏறியும் குதித்தார். அவர் குதித்த இடத்தில்..... கோயில் கிணறு இருந்தது. அதில் விழுந்து இறந்து விட்டார். நடந்ததை அறியாத பக்தரின் மனைவி இரவு முழுவதும் கணவனைக் காணாமல் தவித்தாள்.

மறுநாள் கோயிலைத் திறந்த போது, விஷயம் ஊர் முழுவதும் பரவி கூட்டம் கூடி விட்டது. அது தான் அங்கே கூட்டமாக இருக்கிறது’’ என்று முடித்தான் சீடன்.

திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்ய சென்று இவ்வாறு துயரச்சம்பவம் நடைபெற்றதை எண்ணி வருந்திய மகான் தனது சீடர்களுடன் சென்றார்.

உயிரற்றநிலையில் தரையில் கிடத்தப்பட்டு இருந்த பக்தனைப் பார்த்தார். கழுத்தில் துளசி மாலையுடன் இருந்த அவனைப் பார்த்ததும், “ஹே! ராமா! உன்பக்தர்களுக்கு இந்த கதி வரலாமா?’’ என்று முறையிட்டு பிலஹரி ராகத்தில் ஒரு கீர்த்தனை பாடி, துளசி தீர்த்தத்தை அவன் உடம்பில் தெளித்தார்.

சுற்றி நின்ற அனைவரும் பக்தி பரவசத்துடன் ஏழுமலை பெருமானை வணங்கியவண்ணம் நின்றிருந்தபோது...

இறந்த பக்தன், அப்படியே உயிர் பெற்று எழுந்தான். அங்கு நின்ற அனைவரும் மகானின் கால்களில் விழுந்து வணங்கி மகிழ்ந்தனர். துயர் தீர்க்கும் மகான்கள் புராண காலத்தில் மட்டுமல்ல! இந்த காலத்திலும் இருக்கிறார்கள்என்பதை விளக்கும் சம்பவம் இது. அந்த மகான் வேறு யாருமல்ல தியாகராஜ சுவாமிகள்.



www.aanmeegamalar.com

# தாலிக்கயிற்றை மாற்றும் வழிமுறைகள்

பெண்கள் அணிந்துள்ள தாலிக்கயிறு அழுக்காகி விட்டாலோ, மாங்கல்யம் பழுதாகி புது மாங்கல்யம் அணிந்தாலோ, திங்கள், செவ்வாய், வியாழக்கிழமை மாற்றலாம்.

இதை காலை சாப்பிடும் முன்பே, ஏதேனும் கோயிலுக்குச் சென்று, நடைபாதையில் அமரா மல், ஒரு ஓரமாக கிழக்கு நோக்கி அமர்ந்து மாற்றுவது மிகவும் நல்லது.

மாங்கல்ய கயிற்றில் ஊக்கு, சாவி தொங்க விடக்கூடாது.

மாலைநேரத்திலும், ராகு, எமகண்ட காலத்திலும் மாற்றக்கூடாது.

இவ்வாறு செய்வதால், கணவரும், தாலி மாற்றும் பெண்ணும் தீர்க்காயுளுடன் இருப்பர் என்பது ஐதீகம்.

அழுக்கு கயிற்றில் தாலி அணிந்திருந்தால் வறுமை அதிகமாகும்.

எனவே, உங்கள் தாலிக்கயிறை அவ்வப்போது மாற்றிக் கொள்ளுங்கள்.

**Anita Rajesh Pandiyan**
**Chembur, Mumbai**





www.aanmeegamalar.com

# நான்கே நிமிடத்தில் பிரம்மதோஷம், பில்லி, சூனியம் போக்கும்

# சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் கோயில்

பெருமாளுக்கு உகந்த 108 திவ்ய தேசங்களில் சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் சன்னதியும் ஒரு திவ்யதேசமாகும்.

108 திவ்யதேசங்களில் ஒவ்வொரு திவ்ய தேசத்திற்கும் ஒரு சிறப்பு இருப்பது போல, சோளிங்கர் லட்சுமி நரசிம்மருக்கும் ஒரு விஷேச சிறப்பு இருக்கிறது. இத்தலத்தை “கடிகாசலம்'' என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது கடிகை நேரம் என்பது ஒரு நாழிகை என்பதை குறிக்கும். அதன்படி ஒரு நாழிகை (நான்கு நிமிடங்கள்) இத்தலத்தில் இருந்தாலே மோட்சம் கிடைக்கும் என்று தல வரலாறு கூறுகிறது.

750 அடி உயரத்தில், 1305 படிக்கட்டுகளுடன் ஒரே மலை குன்றின் மீது 200 அடி நீளம், 150 அடி அகலத்தில் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவில் உள்ள இக்கோயிலில் லட்சுமி நரசிம்மர் யோக நிலையில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இவருடன் அமிர்தவல்லி தாயாரும் அருளாசி வழங்குகிறார். வடக்கு நோக்கிய ராஜகோபுரத்துடன் இரண்டு திருச்சுற்றுகள் கொண்டுள்ள அழகிய கோயில். இவர் வீற்றிருக்கும் மலைக்கும் கடிகாசலம் மலை என்றே கூறப்படுகிறது.

பொதுவாக பெருமாள் கோயில்களில் மூலவரின் கருவறையிலேயே, உற்சவ திருமேனிகளையும் வீற்றிருக்கச் செய்வர். ஆனால் சோளிங்கரில் மட்டும் யோக நரசிம்மர், மூலவர் மட்டுமே கிழக்கு நோக்கியபடி, சிம்ம சோஷ்டாக்ருதி விமானத்துடன் கூடிய கருவறையில் காட்சிதருகிறார். மூலவர் யோக நரசிம்மசுவாமி சங்கு சக்ரதாரியாக நான்கு கரங்களுடன், இருகால்களையும் யோகாசனத்தில் மடித்து அமர்ந்தபடி யோகப்பட்டையுடன் காட்சி தருகிறார்.

விசுவாமித்திரர், ஒரு கடிகை நேரம் இம்மலையில் இருந்து இத்தலத்து இறைவனை வழிபட்டு பிரம்மரிஷி பட்டமும் பெற்றதாக வரலாறு உள்ளது. பக்தன் பிரகலாதனுக்கு



காட்சி தந்த நரசிம்ம அவதார திருக்கோலத்தை தாங்களும் கண்டு ஆனந்திக்க வேண்டுமென வசிஷ்டர், காசியபர், அத்ரி, ஜமதக்னி, கவுதமர், பாரத்துவாஜர் ஆகிய முனிசிரேஷ்டர்களோடு, விசுவாமித்திரர் இத்திருத்தலத்தில் தவமிருந்தார்.

கடிகாசலத்தில் தவம் மேற்கொண்டிருந்த சப்தரிஷிகளுக்கு காலன், கேயன் எனும் இரு அரக்கர்கள் தொல்லை கொடுத்து வந்தனர். அவர்களை வதம் செய்வதற்காக ஆஞ்சநேயர், எம்பெருமானின் சங்கு சக்கரங்களை வேண்டிப் பெற்று அவற்றின் துணையோடு, அரக்கர்களை அழித்தார். மகரிஷிகள் எழுவரின் தவத்தினை மெச்சிய திருமாலும், திருக்கடிகைக்கு எழுந்தருளி நரசிம்ம மூர்த்தியாகக் காட்சியளித்தார். ஆஞ்சநேயரும் நரசிம்ம அவதாரக் காட்சியைக் கண்டு ஆனந்தத்தோடு, சங்கு சக்கரத்தோடு பெரியமலைக்கு எதிரில் யோக ஆஞ்சநேயராக அமர்ந்துவிட்டார்.

இம்மலையின் அருகே எதிர்திசையில் 350 அடி உயரத்தில், 406 படிக்கட்டுகள் கொண்ட, சிறிய மலையின் மீது ஆஞ்சநேயர் தியான நிலையில் அமர்ந்தபடி பக்தர்களின் குறைகளை நிவர்த்தி செய்து வருகிறார். ஆண்டு முழுவதும் கண் மூடிய நிலையில் தியானத்தில் இருக்கும் யோக நரசிம்மர், கார்த்திகை மாதத்தில் மட்டும் கண் திறந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதாகவும் ஐதீகம்.

உற்சவர் பக்தோசித பெருமாள், சுதாவல்லி, அமிர்தவல்லி எனும் தனது இருதேவியருடன், மலை அடிவாரத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் தனிக்கோயில் கொண்டுள்ளார். அங்கு அமிர்தவல்லித் தாயார் தனித்தனி சன்னதி கொண்டுள்ளார். அமிர்த தீர்த்தம், பிரம்மதீர்த்தம் ஆகியவை பக்□தாசித பெருமாள் கோயில் அருகில் உள்ளன.

பில்லி, சூனியம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பிரம்மதீர்த்தத்தில் நீராடி மலைமீது அமர்ந்து அருள்பாலிக்கும் யோகநரசிம்மரையும், யோக ஆஞ்சநேயரையும் வணங்கினால் நோய்கள் நீங்கப் பெறலாம் என்பது நம்பிக்கை. தொட்டாச்சாரியார் ஆண்டுதோறும், காஞ்சிபுரம் சென்று வரதராஜப்பெருமாளை சேவித்து வருவதை வழக்கமாகக் கொண்டவர். வயது மூப்பு காரணமாக அவரால் காஞ்சிபுரம் வரை பயணிக்க முடியவில்லை.

ஒருநாள் இங்குள்ள தக்கான் குளக்கரையில் அமர்ந்தபடி, காஞ்சி வரதராஜப்பெருமாளையும், அவரது கருடசேவையையும் பற்றி சிந்தித்தபடி இருந்தார். அப்போது கருடவாகனத்தில் வரதராஜப்பெருமாள் தக்கான் குளக்கரையில் தொட்டாச்சாரி யாருக்கு காட்சி தந்தார். இன்றும் காஞ்புரம் வரதராஜர் பிரம்மோற்சவத்தின் 3ம் நாள், பெருமாள் கருடவாகனத்தில் சோளிங்கர் தக்கான் குளத்திற்கு எழுந்தருளுகிறார். இந்தக்குளத்தில் நீராடினால், பிரம்மதோஷம் கூட நீங்கும் என்பது ஐதீகம்.

– பக்தி.ராஜ்குமார்



www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com



# நல்லதை பேசுங்கள் நல்லதை பாருங்கள்

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் பூமியில் ஏதோ ஒரு கடமையை நிறைவேற்ற இறைவனால் படைக்கப்பட்டவைகளாகும். இவ்வாறு படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரினமும் தங்களது சவுகரியத்திற்கு ஏற்ப தங்களது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டு, அதில் சிறந்த வாழ்க்கை முறையை அடுத்து வந்த தங்களது சந்ததியினருக்கும் கற்றுக் கொடுத்துள்ளனர்.

இந்தவகையில் நாடோடிகளாகவும், காடுகளிலும் சுற்றித்திரிந்த மனிதர்கள், நாடோடி வாழ்க்கை முறையை கைவிட்டதும், நிரந்தரமாக ஓரிடத்தை தேர்ந்தெடுத்து தங்கும் பழக்கத்தை உருவாக்கியபோது உருவானதுதான், நிரந்தர குடியிருப்புகள்.

தாங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும், தங்களுக்கும் எந்தவித அசவுகரியங்களும் இல்லாமல், மன நிம்மதியுடன் தங்குவதற்கு உருவாக்கப்பட்டவையே குடியிருக்கும் வீடுகள்.

காலப்போக்கில் நாகரீக வளர்ச்சி, தேவைகள் போன்றவை அதிகரிக்க... அதிகரிக்க ஒவ்வொரு கண்டுபிடிப்புகளும் வீடுகளை ஆக்கிரமிக்கத் துவங்கியதும், அவற்றில் பல்வேறு பொருட்கள் தற்போது மனிதர்களின் மன அமைதிக்கும், குடும்ப ஒற்றுமைக்கும் ஊறு விளைவிக்கும் எதிரிகளாக மாறிவரும் சூழ்நிலை உருவாகியிருப்பதை மறுக்க முடியாது.

அந்தவகையில் தற்போது முதலிடம் வகிப்பது தொலைக்காட்சிபெட்டி என்ற "தொல்லைக்காட்சி ஒளிஒலி பரப்பு"களைக் கூறலாம். எப்போதும் அமங்கலமான விஷயங்களை மட்டுமே ஒளிஒலி பரப்பக்கூடிய காலச் சூழ்நிலை தற்போது நிலவுகிறது.

பார்க்கக் கூடாத, கேட்கக் கூடாத விஷயங்கள் மட்டுமே தற்போது அவைகளின் பிரதான நிகழ்ச்சிகளாக மாறி வருகிறது.

நல்ல விஷயங்களை பார்ப்பதாலும், கேட்பதாலும், பேசுவதாலும் கிடைக்கும் பலன், ஆயிரம் தான தர்மங்களை செய்தால் கிடைக்கும் பலனைவிட அதிகமாகும்.

இந்த வகையில் நமது முன்னோர்கள் கூறிச் சென்ற இதிகாச புராணங்களில் உள்ள ஒரு சிறிய நிகழ்ச்சியை பார்ப்போம்...

விஸ்வாமித்திரரின் ஆஸ்ரமத்திற்கு வசிஷ்டர் வந்திருந்தார். இருவரும் பல விஷயங்களைப் பேசினர். வசிஷ்டர் விடை பெறும் போது விஸ்வாமித்திரர் அவருக்கு மறக்க முடியாத அன்பளிப்பு ஒன்றை வழங்க விரும்பி ஆயிரம் ஆண்டு தவத்தால் தனக்குக் கிடைத்த சக்தியை கொடுத்தார். மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட வசிஷ்டரும் நன்றி சொல்லி புறப்பட்டார்.

இதைப்போன்று இன்னொரு சமயத்தில் வசிஷ்டரின் ஆஸ்ரமத்திற்கு விஸ்வாமித்திரர் வர நேர்ந்தது. வசிஷ்டரும் அவரை அன்புடன் உபசரித்தார். புண்ணியம் தரும் ஆன்மிக விஷயங்களை மட்டுமே பேசினார். விடை பெறும் நேரத்தில் வசிஷ்டரும் விஸ்வாமித்திரருக்கு அன்பளிப்பு வழங்க விரும்பினார்.

இவ்வளவு நேரம் நல்ல விஷயங்களை பேசியதற்கு கிடைத்த புண்ணிய பலனை உமக்கு அளிக்கிறேன் என்றார். இதைக் கேட்ட விஸ்வாமித்திரரின் முகம் சுருங்கியது. " நீங்கள் எனக்கு அளித்த ஆயிரம் ஆண்டு தவப்பயனுக்கு இந்த அரை நாள் நல்ல விஷயங்கள் பற்றி பேசிய புண்ணியமும் எப்படி சமமாகும் என்று தானே யோசிக்கிறீர்கள்? என்று கேட்டார். விஸ்வாமித்திரரும் தலையாட்டினார்.

எது உயர்ந்தது என்பதை நாம் பிரம்மாவிடமே கேட்டு தெரிந்து கொள்வோம் என்று முடிவு செய்து பிரம்மலோகம் சென்றனர். பிரம்மாவிடம் நடந்ததை விளக்கினர். இது விஷயத்தில் தீர்ப்பு சொல்ல என்னால் முடியவில்லை. விஷ்ணுவிடம் முறையிடுங்கள் என்றார் பிரம்மா.

அவர்களும் விஷ்ணுவிடம் சென்று கேட்டனர். தவ வாழ்வில் என்னை விட சிவனுக்குத் தான் நிறைய அனுபவம் உண்டு. அவரிடம் விசாரித்தால் உண்மை விளங்கும் என்றார் விஷ்ணு. கைலாயம் சென்று சிவனிடம் விளக்கம் தர வேண்டினர். சிவனும் உங்களுக்கு தெளிவு வேண்டுமானால் பாதாள லோகத்திலுள்ள ஆதிசேஷனின் உதவியை நாடுங்கள் என்றார். விஸ்வாமித்திரரும் வசிஷ்டரும் பாதாளலோகம் வந்தனர். தங்கள் சந்தேகத்தை எடுத்துக்கூறினர்.

இதற்கு யோசித்தே பதில் சொல்ல வேண்டும் அதுவரை இந்த பூலோகத்தை தாங்கும் பணியை நீங்கள் செய்யுங்கள் தலையில் சுமக்க கடினமாக இருக்கும் எனவே இதை ஆகாயத்தில் நிலை நிறுத்தி வையுங்கள் என்றார். உடனே விஸ்வாமித்திரர் நான் இப்போதே ஆயிரம் ஆண்டுகள் செய்த தவத்தின் சக்தியை கொடுக்கிறேன் அதன் பயனாக பூமி ஆகாயத்தில் நிலைபெற்று நிற்கட்டும் என்றார். ஆனால் பூமியில் எந்த மாற்றமும் உண்டாகவில்லை. அது ஆதிசேஷனின் தலையிலேயே நின்றுகொண்டிருந்தது.

வசிஷ்டர் தன் பங்குக்கு அரைமணி நேரம் நல்ல விஷயங்களை பேசியதால் உண்டாகும் புண்ணியத்தை கொடுக்கிறேன் இந்த பூமி அந்தரத்தில் நிற்கட்டும் என்றார் இதைச் சொன்னதும் ஆதிசேஷனின் தலையில் இருந்த பூமி கிளம்பி அந்தரத்தில் நின்றது. ஆதிசேஷன் பூமியை எடுத்து மீண்டும் வைத்துக்கொண்டு நல்லது நீங்கள் இருவரும் வந்த வேலை முடிந்துவிட்டது போய் வரலாம் என்றார். கேட்ட விஷயத்திற்கு தீர்ப்பு சொல்லாமல் வழியனுப்பினால் எப்படி என்றனர் ரிஷிகள் இருவரும் ஒருமித்த குரலில்.

உண்மையை நேரில் பார்த்த பிறகு தீர்ப்பு சொல்வதற்கு ஒன்றுமில்லை ஆயிரம் ஆண்டு தவசக்தியால் அசையாத பூமி அரைமணி நேர நல்ல விஷயங்கள் பேசிய பலனுக்கு அசைந்து விட்டது பார்த்தீர்களா? நல்லவர் உறவால் கிடைக்கும் புண்ணியமே தவத்தால் கிடைக்கும் புண்ணியத்தை விட சிறந்தது என்றார் ஆதிசேஷன்.

இந்தப் புராண நிகழ்ச்சியிலிருந்து நாம் ஒன்றை முழுவதுமாக கற்றுக்கொள்ளலாம், நல்ல விஷயங்களை மட்டுமே பேசுங்கள், பயன்படாத தீய விஷயங்களை விட்டுவிடுங்கள்....

குடும்பத்தில் தற்போது ஒரு அங்கமாக இருக்கு தொலைக்காட்சிபெட்டியிலும் நல்ல விஷயங்களை பாருங்கள், மற்றவற்றை தவிர்த்து விடுங்கள். வீணாக தீய விஷயங்களை பார்த்து நமது மன அழுத்தத்தையும், அதனால் நோய்நொடிகளையும் பெறுவதைவிட, அந்த நேரத்தை பயன் உள்ள நல்லவற்றை தெரிந்து கொள்ள செலவிடுங்கள்...




ஆன்மிகமலர் மெயில் புக்

# வாக்குறுதியை நிறைவேற்ற மலையை சுமந்த கிருஷ்ணர்



இராவணனிடமிருந்து சீதையை மீட்க ராமபெருமான் இலங்கை மீது போர் தொடுக்க முடிவ செய்தார், இலங் கை கடலால் சூழப்பட்டிருந்ததால், இலங் கைக்கு பாலம் கட்ட முடிவெடுத்த ராமர். வானரங்களை அழைத்து, மலைகளில் உள்ள பாறைகளை வெட்டி எடுத்து வர கட்டளையிட்டார். வானரங்களும் அவ்வாறே பெயர்த்து வந்து சேர்த்தன.

கடலில் பாலம் கட்டுவதற்கான பணியை நளன், நீலன் என்னும் இருவரிடம் ராமர் ஒப்படைத்தார். அதன்படி வானரங்கள் தங்களின் சக்திக்கேற்ப பாறைகளையும், பெரிய பெரிய கற்களையும் எடுத்துவர உதவி செய்தது.

வானரங்களில் பலசாலியான அனுமன் மிகப்பெரிய மலைஒன்றை எடுத்து வந்தால் எளிதாக பணி முடிவடையும் என்ற நோக்கத்தில் வடக்கை நோக்கி பயணித்து ஒரு மலையை அடைந்தார்.

அடியோடு அதைப் பெயர்க்க முயற்சித் தார். ஆனால், அசைக்க முடியவில்லை. அப்போது அந்த மலை, ஆஞ்சநேயரே! எனக்கு சத்தியத் தின் வடிவமான ராமனின் தரிசனம் கிடைக்க வழி செய்வதாகவாக்களியுங்கள். இப்போதே நானாகவே வந்துவிடுகி றேன், என்றார்.

ஆஞ்சநேயரும் அவ்வாறே வாக் களித்தார். மகிழ்ச்சியுடன் ஆஞ் சநேயர் கையில் மலை அமர்ந்து கொள்ள, அணை கட்டும் இடம் நோக்கிப் புறப்பட்டார். பிருந்தாவனம் பகுதிக்கு மேலாக ஆஞ்சநேயர் வந்த சமயத்தில், அணை கட்டும் பணி முழுமையாக முடிந்து விட்டது. பாறைகளின் தேவை இல்லை என்பதை அறிந்த ஆஞ்சநேயர் தான் சுமந்து வந்த மலையை ஒரு இடத்தில் வைத்து விட்டார்.

வருத்தம் கொண்ட அந்த மலை, கொடுத்தவாக்குறுதியை நிறைவேற்றாமல் செல்கிறீர்களே! இது தான் ராமனின் தொண்டர் செய்யும் வேலையா? என்று வருத்தமும் கோப மும் கலந்து கேட்டது.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத ஆஞ் சநேயரின் பாடு திண்டாட்டமாகி விட்டது.

இருந்தாலும் அதனிடம், வருந்த வேண்டாம். நிச்சயம் ராமனிடம் உன் அன்பை எடுத்துச் சொல்லி முறையிடுகி றேன். கருணைக்கடலான அவர் உன்னை ஏற்று தரிசனம் அளிப்பார் என்று சொல்லி விடை பெற்றார்.

சேதுக்கரையில் இருந்த ராமரிடம், நடந்த விஷயங் களையும், மலைக்கு தான் அளித்த வாக்குறுதி பற்றி தெரி வித்தார்.

ஆஞ்சநேயா! கவலை வேண்டாம். பிருந்தாவன பகுதியி லேயே அந்த மலை இருக்கட்டும். துவாபர யுகத்தில் நான் கிருஷ்ணராக அவதரிக்க இருக்கிறேன். அப்போது அதற்கு தரிசனம் தருவதோடு, என் கையில் தாங்கிக் கொண்டு நிற்கவும் செய்வேன். உடனே அந்த மலையிடம் போய் இதை தெரிவித்து விட்டு வா! என்றார் ராமர்.

ராமரின் இந்த செய்தியால் மகிழ்ச்சியடைந்த ஆஞ் சநேயர், உடனடியாக இத்தகவலை அந்த மலையிடம் கூறினார்.

அந்த மலையும் மிகுந்த மகிழ்ச்சியுடன், ராமஜெபத்தையும் ஜெபித்த வண்ணம் துவாபர யுகத்திற்காக காத்திருந்தது.

துவாபரயுகத்தில் கோகுலத்தில் கிருஷ்ண ராக அவதரித்தார் ராமர். ஒரு சமயம் கோகுலவாசிகள் வழக்க மாக செய்யும் இந்திர பூஜையை நடத்த மறந்தனர். இதனால் கோபம் கொண்ட இந்திரன் பெருமழை பொழியச் செய்தான். பசுக்களை பாதுகாக்க முடியாமல் கோகுல வாசிகள் திண்டாடினர்.

அனுமனால் வைக்கப்பட்ட மலை கோவர்த்தன கிரி என்ற பெயருடன் விளங்கியது. அந்த மலையை கிருஷ்ணர் தன் சுண்டு விரலால் குடை போல தாங்கிப் பிடித்தார். தொடர்ந்து ஏழுநாட்கள் மழை பொழிய பசுக்களும், கோபாலர்களும் மலையின் அடியில் பாதுகாப்பாக நின்ற னர். மாருதி அளித்த வாக்குறுதியால் தான், தனக்கு இப்படியொரு தெய்வீக சம்பந்தம் கிடைத்ததை உணர்ந்த மலை மகிழ்ச்சிக்கடலில் திளைத்தது.

– ஷ்யாம்சுந்தர்

www.aanmeegamalar.com



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# புரட்டாசி சனிக்கிழமையின் அற்புதமான மகத்துவம்



புரட்டாசி மாதம் வந்தாலே பெருமாளுக்கு உகந்த மாதமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது, அதிலும் குறிப்பாக புரட்டாசி மாதம் வரும் சனிக்கிழமைகளில் பெருமாளுக்கு தனிப்பட்ட முறையில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபடுவது சிறப்பாகும்.

அந்த வகையில் தமிழ் மாதங்கள் பன்னிரண்டில் ஆறாவது மாதமான புரட்டாசிக்கு தனி மகிமை உண்டு. இது காக்கும் கடவுளான மகாவிஷ்ணுவுக்கு உகந்த மாதமாகும். ஒவ்வொரு மாதத்திலும் விரதநாட்கள் இருந்தாலும் புரட்டாசி முழுவதும் விரத நாட்கள்தான். சனிகிழமை விரதம், நவராத்திரி விரதம் என தினம் தினம் திருவிழா கோலம் தான். அதுவும் புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாளை வழிபட்டால் எல்லாவிதமான கஷ்டங்களும் நீங்கி வளமான வாழ்வு கிட்டும் என்பது இந்து மதத்தின் மரபு வழி நம்பிக்கை.

ஒன்பது கோள்களில் ஒன்றான புதன் கிரகத்திற்கு உரிய மாதங்களில் புரட்டாசியும் ஒன்று. புதனின் அதி தேவதையாக இருப்பவர் மஹாவிஷ்ணு. எனவே தான் விஷ்ணுவின் அருள்பெற உகந்த மாதமாக புரட்டாசி திகழ்கிறது. பெருமாளின் அம்சமாக கருதப்படும் புதனுடைய வீடு கன்னி. இந்த கன்னி ராசியில் சூரியன் அமர்வது புரட்டாசி மாதத்தில்தான். ஆகவே இந்த மாதத்தில் பெருமாளுக்கு வேண்டிய பஜனைகள் பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன. புதனுக்கு நட்பு கிரகம் சனி பகவான். அதனால்தான் புரட்டாசி மாதத்தில் வரக்கூடிய சனிக்கிழமைகள் விஷேசமாக கொண்டாடப்படுகிறது.

புரட்டாசி மாதத்தை எமனின் கோரைப் பற்களுள் ஒன்றாக அக்னி புராணம் குறிப்பிடுகிறது. எமபயம் நீங்கவும், துன்பங்கள் விலகவும் புரட்டாசி மாதத்தில் காத்தல் கடவுளான விஷ்ணுவை வணங்குவது சிறப்பு. ஒவ்வொரு மாதமும் சனிக்கிழமைகளில் விரதம் கடைப்பிடிப்பது நல்லது. அப்படி விரதத்தினை மேற்கொள்ள முடியாதவர்கள், புரட்டாசி சனிக்கிழமைகளில் அவரவர் குடும்ப வழக்கப்படி மாவிளக்கு ஏற்றி, பெருமாளுக்குப் பூஜை செய்து வழிபட்டு, முடிந்த அளவு அன்னதானம் செய்து வந்தால் பெருமாளின் அருள் கிடைக்கும்.

சனிக்கிழமைகளில் பொதுவாக பெருமாளுக்கு விரதமிருப்பது வழக்கம் தான். இதில், புரட்டாசி மாத சனிக்கிழமைக்கென ஒரு விசேஷம் இருக்கிறது. புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனிபகவான் அவதரித்தார். அதன் காரணமாக, அவரால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய காக்கும் கடவுளான திருமாலை வணங்குவது வழக்கத்தில் வந்தது. இந்த விரதத்தின் மகிமையை விளக்க கதை ஒன்று கூறப்படுகிறது.

சகல வசதிகளும் உள்ள இந்த நாள்களிலும் தொடர் வதுதான் வேங்கடவனின் மகிமைக்கு சான்று. மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்கிறார் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஆனால் ஏழுமலையான் எனக்கு உகந்த மாதம் புரட்சி மாதம்தான் அதிலும் சனிக்கிழமைதான் எனக்கு உகந்த நாள் என்கிறார். இதன் பின்னணியில் ஒரு கதை உள்ளது.

அந்த கதை வருமாறு:

மன்னன் தொண்டைமானுக்கு ஏழுமலையான் மீது மற்றும், பாசமும் அதிகம். எனவே திருவேங்கடவனுக்கு ஆலயம் அமைத்து தினமும் பொன்மலர்களால் அர்ச்சனை செய்வதற்குரிய ஏற்பாடுகளை செய்திருந்தான். அதன்படியே பூஜையும் செய்து வந்தான். ஒருநாள் பூஜையின்போது பொன்மலர் களுக்கிடையே மண் மலர்களும் வந்து விழுவதைக் கண்டான். திடுக்கிட்ட அவன், அவை மண்மலர்கள்தானா எனக்கூர்ந்து நோக்கினான்.

அவை மண்மலர்கள்தான் என்பதை மீண்டும் மீண்டும் பூஜையில் வந்து விழுந்த மலர்கள் சந்தேகமேயில்லாமல் நிரூபித்தன. கதவுகள் அனைத்தையும் மூடி விட்டு மன்னன் மீண்டும் பூஜையைத் தொடர்ந்தபோதும் அவ்வாறே நிகழ்ந்தது. மன்னனின் மனம் குழப்பத்துக்கு உள்ளாகியது. தனது வழிபாட்டில் ஏதேனும் பிழை இருக்குமோ என உள்ளுக்குள் வருந்தினான்.

குருவை என்ற கிராமம் ஒன்றில் பீமய்யா என்ற குயவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். பிறவியிலேயே அவனுக்கு கால் ஊனம். தனது குலத்தொழிலான மண்பாண்டங்கள் செய்தலை நேர்மை தவறாமல் ஏழுமலையான் மீது அயராத பக்தி கொண்டு செய்து வந்தான். வேங்கடவனும் அவன் பக்திக்கு மெச்சி, தன் திருவுருவத்தை



www.aanmeegamalar.com

அவனுக்கு கனவில் காட்டி பின்பு மறைந்து விட்டார்.

பீமய்யாவுக்கு திருமால் கனவில் காட்சியளித்த நாள், புரட்டாசி மாத சனிக்கிழமை விடியற்காலை நேரம். பீமய்யாவும், தனது கனவில் தோன்றிய திருமாலின் வடிவத்தை அப்படியே செய்தான். அதன்பின்னர் மண்ணால் ஏழுமலையானின் உருவத்தை வடித்து, மலர்கள் தூவி வழிபட்டு வந்தான். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை நாளில் தவறாமல் விரதம் அனுசரித்து வந்த பீமய்யன், பெருமாளின் சிந்தனையிலேயே தொழிலையும் செய்து வந்தான்.

இவ்விதம் தொழில் செய்து கொண்டிருக்கும் போதே, கண்மூடி தியானத்தில் ஆழ்ந்து விடுவான். அச்சமயயங்களில் தான் என்ன செய்கிறோம் என்பதை அறியா நிலையிலேயே, பிசைந்து கொண்டிருக்கும் களி மண்ணையே மலர்களாக பாவித்து பெருமாளுக்கு அர்ச்சிப்பான்.

காலப்போக்கில் இதுவே அவனது அன்றாட அலுவலாகவும் ஆகி விட்டது. இது இப்படியிருக்க, குழப்பத்திலிருந்த தொண்டைமான் ஒருநாள் அபூர்வக் கனவொன்றைக் கண்டான்.

அக்கனவில் வெங்கடநாதன் தோன்றி, 'தமது பக்தன் பீமய்யன் செய்யும் பூஜையே தமக்கு மிகுந்த மனநிறைவை அளிப்பதாகவும், அந்தப் பூஜையை நீயும் செய்து பார், அப்போது உண்மை விளங்கும்' என்று கூறி மறைந்தார். தொண்டைமானும் திருமால் குறிப்பிட்ட இடத்துக்கு சென்று பீமய்யன் செய்யப்போகும் பூஜையை மறைந்திருந்து கவனித்தான்.

தினமும் செய்வது போலவே, பீமய்யன் தான் வடிவமைத்திருந்த வேங்கடவனின் சிலை அருகே அமர்ந்து மண்பாண்டங்களை செய்து கொண்டே, கண்மூடி மண் மலர்களைத் தூவி இறைவனை வழிபடுவதை கண்டான் தொண்டை மன்னன். உடனே பீமய்யனைச் சென்று கட்டித் தழுவிய தொண்டைமான் அவனிடம், `உன் பக்தி உயர்வான பக்தி. உனது வழிபாட்டைத் திருமால் ஏற்றுக் கொண்டு விட்டார் என்பதை நான் புரிந்து கொண்டேன்' என்றான்.

இதற்கிடையில் அந்தப் பரந்தாமன் பீமய்யனின் கனவிலும் தோன்றி, 'உன் பக்தியின் பெருமையை என்று பிறர்கூற அறிகின்றாயோ அன்றே உனக்கு முக்தி அளித்து, வைகுந்தத்துக்கு அழைத்துக் கொள்வேன்' எனக் கூறியிருந்தார்.

அதன்படியே தொண்டைமான், பீமய்யனின் பக்தியை பாராட்டியதைக் கேட்ட மறுகணமே அவனுக்கு முக்தி கிடைத்தது. எனவே புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதம் இருந்து, ஏழுமலையானை மனம் உருக வழிபட்டால், செல்வமும், நிம்மதியும் கிடைக்கும் என்பதோடு, முக்தியும் வாய்க்கும் என்பது ஐதீகம்.

புரட்டாசி மாத சனிக்கிழமை விரதத்துக்கு இப்படியொரு மகத்துவம் இருக்கிறது.

– ஷ்யாம் சுந்தர்







வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.
எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033

# இறைவன் உருவமுள்ளவனா? அல்லது அருவமானவனா?

இறைவன் உருவம் உள்ளவனா அல்லது அருவமானவனா? என்பது பற்றி பரமஹம்ஸர் கூறுகிறார்: “இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கு எடுக்கும் உங்கள் முயற்சியில் இதைப் பற்றிய ஒரு சிறு விவாதம் உங்களுக்கு உதவியாக இருக்கும். அநேகர் இறைவனை உருவம் உள்ளவன் என நினைக்கவே விரும்புவதில்லை.

அவர்கள் இறைவனுக்கு மனிதப்பண்பு அல்லது மனிதவடிவம் கற்பிக்கின்ற கருத்து எல்லைக்குட்பட்டது என்று எண்ணுகின்றனர். அவர்கள் அவனை அருவமான பரமாத்மா என்றும் எல்லாம் வல்ல சக்தி என்றும் இப்பிரபஞ்சத்திற்குப் பொறுப்பான ஒரு விவேகமான ஆற்றல் என்றும் கருதுகிறார்கள்.

ஆனால்நம்மைப்படைத்தவன், அருவமானவன் என்றால் எப்படி அவன் மனிதர்களைப் படைத்தான்? நாம் உருவம் உள்ளவர்கள்; நமக்கென்று தனித்தன்மை இருக்கிறது; நாம் நினைக்கிறோம், உணர்கின்றோம், இச்சாசக்தியை உபயோகிக்கின்றோம். இறைவனின் அருவத்தன்மையை எண்ணிப் பார்க்கும்பொழுது அவன் வெகுதொலைவில் உள்ளவன், நம்முடைய பிரார்த்தனை எண்ணங்களுக்கு விடையளிக்காமல் அவற்றை வெறுமனே பெறுபவன்; அவன் எல்லாவற்றையும் அறிந்தவன். ஆனால் இதயமில்லாத மௌனத்தைக் காப்பவன் என்ற கருத்து நமக்குத் தோன்றுகிறது. இது தத்துவரீதியான தவறு. ஏனெனில் இறைவன்தான் எல்லாமே. அதாவது அவன் உருவம் உள்ள வன், மேலும் அருவமானவனும்கூட. அவன் உருவமுள்ள மனிதர்களை படைத்தான். மனிதர்களை படைத்தவன் முழுவதுமாக அருவமாக இருக்க முடியாது.”

“இறைவன் மனித உருவம் எடுப்பான். நம்மிடம் வருவான், நம்மிடம் பேசுவான் என்று எண்ணுவது நம் இதயங்களின் ஓர் ஆழ்ந்த தேவையை பூர்த்தி செய்கிறது. அவர் ஏன் அவ்வாறு ஒவ்வொருவருக்கும் செய்வதில்லை. அநேக மகான்கள் இறைவனின் குரலை கேட்டிருக்கிறார்கள். ஏன் உங்களால் முடியாது? “இறைவா நீ கண்ணுக்குப் புலப்படாதவன், அருவமானவன், தெரியாதவன், மேலும் தெரிந்து கொள்ள முடியாதவன். இருப்பினும் என்னுடைய பக்தி என்னும் உறைபனி மூலமாக உன்னை ஓர் உருவமாக உறைய வைக்கமுடியும் என்று நான் நம்புகிறேன்.” உங்களுடைய தீவிர பக்தி மூலம் இறைவனை ஒரு தனிப்பட்ட உருவம் எடுத்துக்கொள்ள இணங்கவைக்கமுடியும். நீங்கள் ஆழ்ந்து பிரார்த்தனை செய்தால், அநேக மகான்கள் போல் இறைவனின் உயிருள்ள உடலை நீங்கள் பார்க்கலாம். ”நான் ஆத்மா” மற்றும் “நீ அதுவே தான்” என்று ஆதிசங்கரர் பறைசாற்றுகிறார். மனிதர்கள் இறைவனின் பிரதிபிம்பமாகவே படைக்கப்பட்டுள்ளார்கள் என்று பல மகான்கள் கூறியிருக்கிறார்கள்.”

அவர் மேலும் கூறுகிறார் : “என் அறிவை புத்தகங்களிலிருந்து பெறுவதைவிட அதிகமாக நான் இறைவனிடமிருந்து பெறுகிறேன். நான் படிப்பது அரிது. நான் நேரடியாக உணர்ந்திருப்பதைத்தான் நான் உங்களுக்குக் கூறுகிறேன். அதனால்தான் நான் அதிகாரத்துடன் பேசுகிறேன். சத்தியத்தை நேரடியாக உணர்ந்த அதிகாரம். முழு உலகத்தின் கருத்தும் இதற்கு எதிராக இருக்கலாம். ஆனால் நேரடியாக உணர்ந்தால் ஏற்பட்ட அதிகாரம் எப்பொழுதுமே இறுதியாக ஒப்புக்கொள்ளப்படும்.

“இறைவனின் பிரதிபிம்பம்” என்பதன் பொருள், மனிதனுக்கும்கூட பிரபஞ்ச உணர்வு நிலை என்னும் சக்தி இயற்கையிலேயே இருக்கிறது என்றாலும், ஒரு சிலர்தான் அதை விருத்தி செய்துகொள்கின்றனர். மனிதனுக்கும் படைப்பவனைப்போல், உலகங்களை கணத்தில் படைக்கும் இச்சாசக்தி இருக்கிறது. ஆனால் சிலர்தான் தங்களுக்குள் உள்ள சக்தியை விருத்தி செய்துகொள்கிறார்கள். பிராணிகள் பகுத்தறியமுடியாது. ஆனால் மனிதனால் முடியும்.

இறைவனுக்குள்ள எல்லாகுணங்களும் உணர்வுநிலை, பகுத்தறிவு, இச்சாசக்தி, உணர்ச்சி, அன்பு மனிதனுக்கும் இருக்கின்றன. இப்படிப்பட்ட குணாதிசயங்களில் மனிதன் இறைவனின் பிரதிபிம்பமாக படைக்கப்பட்டிருக்கிறான் என்று கூறலாம்.”

**19 பாகம்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

பரமஹம்ஸர் அருளுகிறார்: “இறைவனுடன் ஒன்றுதல் இறைவனுடைய சக்தியுடன் ஒன்றுதலாகும். மனிதனுக்கு எல்லா சக்தியும் உண்டு. இறைவனின் உணர்வுநிலையுடன் உங்கள் உணர்வுநிலை ஒன்றானால், நீங்கள் எதை மாற்ற விரும்பினாலும் மாற்ற முடியும். மோட்டார் வாகனத்தின் பாகங்களை தேவைக்கேற்ப வேறு பாகங்களைக் கொண்டு மாற்றிக்கொள்ளவோ அல்லது புதுப்பிக்கவோ முடியும்.

ஆனால் ஸ்தூல சரீரத்தில் அதைப் போன்ற ஒரு மாற்றத்தை நிகழச் செய்வது மிகவும் சிக்கலான விஷயமே. எல்லா செல்களையும் கட்டுப்படுத்துவது மனம்தான். மனதை முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டால், அவனுடைய சரீர செல்களையும் பாகங்களையும் எத்தனை தடவை விரும்பினாலும் நினைத்தஉடன் மாற்றிக்கொள்ளவோ அல்லது புதுப்பிக்கவோ முடியும். உதாரணமாக, அவன் ஒரு எண்ணத்தின் மூலமே, அணுக்களை மாற்றி ஒரு முழு புது பல்வரிசையையே உண்டாக்க முடியும். ஒருவன் ஆன்மீகத்தில் முன்னேற்றமடைந்தால், சடப் பொருட்களின் மீது முழுமையான ஆதிக்கம் உண்டாகிறது.”

“இறைவன் பரமாத்மா ஆவான். அருவமான அவன் கண்ணுக்குப் புலப்படாதவன். ஆனால், இந்த ஸ்தூல உலகைப் படைத்தபொழுது அவன் பரமபிதாவானான். படைப்பவன் என்ற பாகத்தை ஏற்றவுடன் அவன் கண்ணுக்குப் புலப்பட்டவன் ஆனான். இந்த பிரபஞ்சம் முழுவதுமே இறைவனின் சரீரம்தான். நட்சத்திரங்கள் அவனுடைய கண்கள். புல்பூண்டுகளும் மரங்களும் அவனுடைய கேசம். நதிகள் அவனுடைய இரத்த ஓட்டமாகும். சமுத்திரத்தின் இரைச்சல் வானம்பாடியின் கானம். பிறந்த குழந்தையின் அழுகுரல் மற்றும் படைப்பின் பிற ஒலிகள் எல்லாம் அவனுடைய குரல் ஆகும். இதுதான் உருவம் கொண்டுள்ள இறைவன்.

அவர் மேலும் தொடர்கிறார்: “படைக்கும் பொழுது பரமாத்மாவின் மனதில் ஒரு குறிப்பிட்ட கருத்து அல்லது திட்ட அமைப்பு இருந்தது. முதலில் அவன் முழு பிரபஞ்சத்தையும் வெளியாக்கினான். பிறகு மனிதனைப் படைத்தான். கோள்களின் அமைப்பாலான ஸ்தூல சரீரத்தை தனக்காக வடிவமைத்துக்கொண்டதில் இறைவன் வெளிப்படுத்திய மூன்று தன்மைகளாவன: பிரபஞ்ச உணர்வுநிலை, பிரபஞ்ச சக்தி, பிரபஞ்சத்திறன். இம்மூன்றும் முறையே மனிதனுடைய எண்ணம் அல்லது காரண சரீரம், சூட்சம அல்லது ஆற்றல் சரீரம் மற்றும் ஸ்தூல சரீரத்தை ஒத்திருக்கின்றன.



இவைகளுக்குப் பின் உள்ள ஆன்மா அல்லது உயிர்தான் பிரம்மம் ஆகும். பிரம்மம் பேரண்ட (மேக்ரோகாஸ்மிக்) அளவில் பிரபஞ்ச உணர்வு நிலையாகும். பிரபஞ்ச சக்தியாகவும், பேரண்டங்களின் சரீரமாகவும் வெளிப்படுகிறது. சிறுபிண்ட (மைக்ரோகாஸ்மிக்) அளவில் மனித உணர்வுநிலையாகவும், மனித சக்தியாகவும், மனித சரீரமாகவும் வெளிப்படுகிறது. எனவே மனிதன் உண்மையாகவே இறைவனின் பிரதிபிம்பமாகப் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதைப் பார்க்கிறோம்”. இறைவனை நேசிப்பவர்களுக்கு தம் இக்கட்டான சூழ்நிலைகளில் வரும் ஆபத்துகளிலிருந்து இறைவனே ஏதோ ஒரு உருவத்தில் வந்து காப்பாற்றுவான்.

மனிதன் இறைவனின் பிரதிபிம்பமாக படைக்கப்பட்டுள்ளதால் இறைவன் மனிதனுடன் எப்பொழுதும் இருக்கிறான். இந்த இரகசியத்தை அறிந்த மனிதன் இறைவனை நேசிக்கிறான். அப்பொழுது மனிதனுக்கு மலைபோல் வரும் துன்பத்தை பனி போலாக்கிவிடுகிறான் இறைவன். அத்துடன் மனிதனின் மனம் கண்ணாடி போன்று களங்கமற்றிருக்க வேண்டும் என்ற பாடத்தையும் கற்றுக்கொடுக்கிறான் இறைவன். அதற்கான ஓர் எடுத்துக்காட்டை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறேன்.

மனதில் எதையும் மூடி மறைக்காதே

பாண்டவர்கள் பனிரெண்டு வருடங்கள் வனவாசத்திற்காகச் சென்ற சமயம், அவர்கள் பாரதத்திலுள்ள அனைத்து காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்தனர். ஒருமுறை அவர்கள் ஒரு பெரிய வனத்திற்குச் சென்றனர். அங்குள்ள காய்கனிகளை புசித்தவண்ணமிருந்தனர். அப்பொழுது திடீரென்று ஒரு மரத்தில் அழகான ஒரு பெரிய பழத்தைக் கண்டாள் பாஞ்சாலி. அது கண்களைக் கவரும் வண்ணமிருந்தது.





www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

உடனே அவள் அர்ஜூனனைப் பார்த்து அந்தப் பழத்தை அம்பால் வீழ்த்தித் தரும்படிக் கேட்டுக் கொண்டாள். அர்ஜூனனும் அப்பழத்தை அம்பெய்து வீழ்த்தினான். பழம் கீழே தரையில் வீழ்ந்தது.

பழம் கீழே விழுந்த நொடியில் துவாரகாவிலிருந்த ஸ்ரீகிருஷ்ணன் அந்த இடத்திற்கு வந்தார். பாண்டவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, "கிருஷ்ணா, நீ இங்கே எதற்காக வந்தாய்?'' என்று கேட்டனர். "நான் வந்த விஷயம் பின்னர் சொல்கிறேன். உங்களுக்கு இந்த கராள வனத்தைப் பற்றி என்ன தெரியும்? இந்த வனம் கராள முனிவருக்குச் சொந்தமானது. இந்த வனம் 'கராள விருட்சங்கள் நிறைந்த வனமாகையால் இதற்கு 'கராளவனம்' என்ற பெயர் வந்தது. அதனால் அந்த முனிவருக்கு இந்த வனம் சொந்தமானதால் அவர் 'கராள முனிவர்' என்றழைக்கப்படுகிறார். கிருஷ்ணன் கூறியதைக் கேட்ட பாண்டவர்கள், "கராள வனமா?, கராள முனிவரா? அவர் எப்படியிருப்பார்?'' என்று கேட்டனர்.

"அவர் மிகவும் கோபமுடையவர்; இந்த விஷயம் உங்களுக்குத் தெரியாது; இங்கே இருக்கும் விருட்சங்களில் ஒரே மரத்தில் ஒரே பழம் மட்டும்தான் இருக்கும். அதையும் நீங்கள் அம்பால் எய்து கீழே வீழ்த்தினீர்கள். அந்த முனிவர் அதிகாலையில் இந்த வனத்தை விட்டு வெளியே செல்வார். மாலையில் சூரியன் மறைவதற்குள் திரும்பி வருவார். அவர் திரும்பி வரும்பொழுது இந்தப் பழம் கீழே விழுந்து கிடப்பதைப் பார்த்தால் அவருடைய கோபம் உங்கள் அனைவரையும் அழித்துவிடும். இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று ஸ்ரீகிருஷ்ணன் பாண்டவர்களை நோக்கி கேட்டார்.

"அதற்கு என்ன செய்வது கிருஷ்ணா, மிகவும் பயமாக உள்ளது.'' என்று அவர்கள் கூறினர்.

"இதற்கு ஒரே ஒரு வழி மட்டும்தான் உள்ளது. சூரியன் மறையும் நேரமாகிவிட்டது. அவரும் இப்பொழுது வந்துவிடுவார் என்று கிருஷ்ணன் பதிலளித்தார்.

"சொல் கண்ணா, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்றனர் பாண்டவர்கள்.

"கீழே இருக்கும் பழத்தை, மேலே பழம் எங்கிருந்ததோ அந்த மரக்கிளையில் இருக்கச் செய்யவேண்டும்.'' என்றார் கிருஷ்ணன்.

"அது எப்படி முடியும்''? என்றனர் பாண்டவர்கள்.

"செய்யலாம், அது உங்கள் கையில்தான் உள்ளது. உங்களால் மட்டும்தான் முடியும்'' என்றார் கிருஷ்ணன்.

"ஓ, அதைச் சொல் கண்ணா, நாங் கள் செய்கிறோம்'' என்றனர். "நீங்கள் ஒவ்வொருவராக, அதாவது முதலில் தர்மன், இரண்டாவது பீமன் இவ்வாறு முறையாக அவரவர் மனதில் உள்ள இரகசிய ஆசையை கூறவேண்டும்; அது உண்மையாக இருக்கவேண்டும். அப்பொழுது பழம் தானாகவே மேலே சென்றுவிடும்'' என்றார் கிருஷ்ணன். அதை அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

முதலில் தர்மபுத்திரர் "நமது வனவாசமும் ஆஜ்ஞாதவாசமும் முடிந்த பின்னர் எப்படியாவது கவுரவர்களிடம் சமரசமாகப் பேசி நமக்குச் சேரவேண்டியதைப் பெறவேண்டும். இதுதான் என் மனதிலுள்ள ஆசை'' என்று கூறிய உடன் பழம் சிறிது தூரம் மேலே சென்று அந்தரத்தில் நின்றது. அனைவரும் ஆச்சரியப்பட்டனர். அடுத்து'' திரௌபதியை தன் துடையில் அமரச் சொன்ன துரியோதனின் துடையை என்னுடைய கதையால் அடித்து பிளந்து அந்த இரத்தத்தை திரௌபதியின் தலைமுடியில் தடவி கட்டுவேன், இதுவே என் ஆசை'' என்று பீமன் கூறியதும் அந்தப் பழம் இன்னும் சற்று மேலே சென்றது. மூன்றாவதாக, "என் அம்பினால் துரியோதனனைக் கொல்லுவேன்'' என்று அர்ஜூனன் கூறியதும் பாதி தூரத்திற்கு பழம் உயர்ந்த்து. அதே போன்று நகுலனும் சகாதேவனும் தங்கள் மனதிலுள்ளவற்றைக் கூறியதும் பழம் கிட்டத்தட்ட கிளைக்கருகில் சென்றது, கடைசியில், ''நீ உன் மனதிலுள்ள ஆசையை கூறு'' என்று கண்ணன் பாஞ்சாலியை நோக்கிச் சொன்னார். "சபாமத்தியில் என் ஆடையை அவிழ்த்து என்னை அவமானம் செய்ய முயன்ற துச்சாதனனை கொல்லவேண்டும், இது தான் என் ஆசை'' என்று பாஞ்சாலி கூறினாள். உடனே அந்தப் பழம் பட்டென்று கீழே தரையில் விழுந்தது.

அதைக் கண்ட பாண்டவர்களும் கிருஷ்ணனும் வியப்படைந்தனர். அப்பொழுது, ''நீ உண்மையான ஆசையை கூறவில்லை திரௌபதி! நீ உண்மையை உரைத்துவிடுவாய்'' என்று கண்ணன் கூறினான். "இல்லை இதுதான் என் உண்மையான ஆசை'' என்று மறுத்துக் கூற, கிருஷ்ணனும் விடவில்லை.. "இதோ பார் அந்த கராள முனிவர் வரும் நேரமாகிவிட்டது. நீ உண்மையை கூறவில்லையெனில் நீங்கள் அனைவரும் அவருடைய கோபக்கனலில் சாம்பலாகிவிடுவீர்கள். உண்மையைக் கூறுவாய், இனி உன் கையில்தான் உள்ளது,'' என்று உண்மையைக் கூறும்படி கண்ணன் நிர்பந்தித்தார். அவள் உன்மையைக் கூறவில்லை. ''உன் மனதில் வேறு ஏதோ ஒரு உண்மை இருக்கிறது. நீ அதைச் சீக்கிரம் கூறிவிடு'' என்று கண்ணன் மிகுந்த கண்டிப்புடன் வற்புறுத்தினார். மிகவும் தயக்கத்துடன் இருந்த பாஞ்சாலி, வேறு வழியே இல்லையா, உண்மையை இங்கேயே கூறித்தான் ஆகவேண்டுமா என்று எண்ணியவாறு உண்மையை சொல்லலானாள்.

"நான் முதலில் கூறியது உண்மையல்ல. உண்மையான ஒரு இரகசியம் என் மனதில் உள்ளது. "என்னுடைய சுயம்வர நேரத்தில் வரணமாலையுடன் அரசர்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு நான் வந்தபொழுது ஆயிரம் சூரியன் உதித்ததுபோலுள்ள கர்ணனின் முகத்தைக் கண்டவுடன் அவரை நான் என் கணவராக முதலில் என் மனதில் எண்ணினேன். இதுதான் என் இரகசிய ஆசை'' என்று கூறிமுடித்ததும் பழம் உயர்ந்து மேலே சென்று மரக்கிளையில் அமர்ந்தது. "இனி அபாயம் ஒன்றுமில்லை. இதற்காகத்தான் நான் துவராகாவிலிருந்து வந்துள்ளேன். நான் இங்கு வரவில்லை என்றால் நீங்கள் அனைவரும் பெரிய துன்பத்தில்; மீளமுடியாத துன்பத்தில் சிக்கிக்கொண்டிருப்பீர்கள். உங்களைக் காப்பாற்றத்தான் நான் இங்கு வந்தேன்'' என்று கூறி முடித்ததும் கராள முனிவர் வந்தார். ஸ்ரீகிருஷ்ணன் மறைந்துவிட்டார். பாண்டவர்களும் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டனர்.

இறைவனை நாம் ஒவ்வொருவரும் நேசித்து, அவரை நம்முடன் வைத்துக் கொண்டால் எந்த ஆபத்துமின்றி வாழலாம் என்பதை இக்கதை எடுத்துக்காட்டுகிறது. எல்லாம் இறைவன் செயல் என்பர். அதேபோன்று பாண்டவர்களுக்கு நிகழ்ந்ததும் அவன் செயலே ஆகும். வேண்டுமென்றே பாஞ்சாலியின் மனதை கிளறிவிட்டான் கண்ணன். அவள் தன் மனதில் பூட்டி வைத்திருந்த இரகசியத்தை வெளிப்படுத்துவதற்காகவே ஸ்ரீகிருஷ்ணன் திட்டத்தைத் தீட்டினான். பாண்டவர்களை கராள வனத்திற்கு அனுப்பிவைத்ததும் கராள விருக்ஷத்திலிருந்து பழத்தை அம்பெய்து கீழே வீழ்த்தச் செய்ததும் எல்லாம் அவனே. இவ்வளவும் செய்ய வைத்தால்தானே திரௌபதியின் மனதிலிருக்கும் இரகசியத்தை வெளிப்படுத்த முடியும்!

அவளுடைய மனதிலிருக்கும் இரகசியம் என்னவென்று கண்ணனுக்குத் தெரியாதா என்ன? இருப்பினும் அவளுடைய நாவால் கூறவைப்பது அவனுடைய விளையாட்டு! அது தீராத விளையாட்டு! அவன் எவ்வளவோ விளையாடியிருக்கிறான். அவற்றில் இதுவும் ஒன்று. பொதுவாக, பெண்கள் கன்னிகையாக இருக்கும்பொழுது தம் மனதிலுள்ள இரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு கூச்சப்படுவார்கள் அல்லவா! அது சகஜம்தானே. அதைச் சொல்லவைத்து தன் காதால் கேட்டு ரசிக்கிறான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா! அதை அவன் நிறைவேற்றினான். விளையாட்டு முடியும் வரை மனப்பதட்டமும் வேதனையும் மனிதனை வாட்டுகிறது. அதுபோன்று திரௌபதி அதை தன் கணவர்கள் மத்தியில் வெளிப்படுத்த எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள், அவள் மனம் எவ்வளவு நொந்திருக்கும் ! உதாரணமாக பூனை எலியை பிடித்த உடனே கொன்று தின்னாது. அதை பலவிதத்திலும் நோகடித்த பின்னர்தான் கொன்று தின்னும். அப்பொழுது எலிக்கு மரணவேதனையாக இருக்கும். அதற்காக ஒரு பழமொழி கூறுவர். "எலிக்கு மரண வேதனை, பூனைக்கு விளையாட்டு ! "இந்தப்பழமொழியின் பொருள் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே தினம் தினம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்வுகளில் உள்ளடங்கியுள்ளது. இறைவனின் விளையாட்டு நிறைவடைந்தால் ஆனந்தமும் அதனால் அனைவருக்கும் நன்மையும் ஏற்படுகிறது. இவற்றை இறைவனின் விளையாட்டு என்று வெறுமனே நினைக்கக்கூடாது. இம்மாதிரியான மன அழுக்குகள் மனிதனுக்கு இருக்கக்கூடாது. அவற்றை அவ்வப்போது துடைத்தெறிவது நன்று.

அதற்கு இறைவன் உதவுகிறான் என்பது பொருள். அழுக்குகள் களைந்தால் மட்டும்தான் இறைவனை அடையமுடியும். இதுதான் இறைவனின் திருவிளையாடலினால் ஏற்படும் நன்மை. இறைவனின் திருவிளையாடல் தினமும் நடைபெற்றால்தான் இறைவனின் குழந்தைகளான நாமெல்லாம் அவனுடன் இணையமுடியும். திருவிளையாடல் என்ற பெயரில் அவன் தன் குழந்தைகளை தன்னுடன் சேர்த்துக்கொள்கிறான். இதுதான் உண்மை!. அவன் திருவிளையாடல் இல்லையேல் உலகம் இல்லை. இன்றைய உலகத்தில் நடைபெற்றுக்கொண்டிருப்பதும் அவன் திருவிளையாடலே!

குருதேவரின் உறுதிமொழி

என் அன்புத் தந்தையே ! எப்படிப்பட்ட சூழ்நிலைகளை நான் எதிர்கொண்டாலும், அவை என்னுடைய வளர்ச்சியின் அடுத்த படியை குறிக்கின்றன என்று எனக்குத் தெரியும். நான் எல்லா சோதனைகளையும் வரவேற்பேன். ஏனென்றால் எனக்குள்ளே புரிந்து கொள்வதற்கான அறிவும் வெல்வதற்கான சக்தியும் இருக்கின்றன என்று எனக்குத் தெரியும்.

மீண்டும் மலரும்....

குருப்ரியா Cell No. 9894595909

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com









www.aanmeegamalar.com

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்        ஆன்மிக மாதமிருமுறை இதழ்





ஆசிரியர், வெளியீட்டாளர்
**C.நாகராஜன்**

♦♦♦

இணை ஆசிரியர்
**முருகன்**

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா Cell 9894595909

♦♦♦

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்

♦♦♦



நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598


## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070







# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து பிரதிகளையும் பார்த்து படித்து மகிழ

**www.aanmeegamalar.com**

பாருங்கள் அனைவருக்கும் பகிருங்கள்

## தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

# தத்துவங்கள் கூறும் மூன்றுவகை குணங்கள்

மனிதன் என்பவன் உடம்பால் மட்டும் ஆனவன் இல்லை. அறிவு, மனம், உணர்வு என்று இன்னும் பிற பல கலவைகளால் ஆனவனே மனிதன் என்று சொல்லலாம். அறிவிலும், அனுபவத்திலும் மிக உயர்ந்த நிலையில் இருந்த நமது முன்னோர்கள் மனித சமூகம் எப்படிபட்டது, எப்படி இருந்தால் சிக்கலின்றி அதனுடைய தொடரோட்டம் அமையும் என்பதை மிக ஆழமாக சிந்தித்தார்கள். அதனால் பொருட்களை உற்பத்தி செய்யும் மனிதர்களை ஒரு குழுவாகவும், உற்பத்தி செய்த பொருட்களை விநியோகம் செய்யும் மனிதர்களை மற்றொரு குழுவாகவும், உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் குந்தகம் வராமல் பாதுகாக்க வேறொரு குழுவையும் மற்ற மூன்று குழுவினர் புதிய புதிய யுக்திகளை கையாள நவீன கண்டுபிடிப்புகளை நவீன சிந்தனைகளை கொடுத்துகொண்டே இருக்கும் மேலும் ஒரு குழுவையும் பிரித்து வைத்தார்கள்.

இந்த நாலு வகை மனித பிரிவுகள் இல்லாமல் அன்றைய மனிதனும் கிடையாது. இன்றைய மனிதனும் இருக்க முடியாது. இந்த பிரிவுகளுக்கு முறையாக சூத்திரன், வைசீகன், சத்திரியன், பிராமணன் என்று பெயர்களை கொடுத்தார்கள். மனித சமுதாயத்தை எப்படி நான்கு பிரிவாக பிரித்தார்களோ அதே போலவே தனி மனித வாழ்க்கையையும் நான்காக பிரித்தார்கள். இளமைகால வாழ்க்கையை கல்வி கற்க வேண்டிய பிராயத்தை பிரம்மச்சரியம் என்றும், குடும்பம் நடத்தி சமுதாய விருத்தியை மேற்கொள்ள வேண்டிய காலத்தை கிரகஸ்தம் என்றும், குடும்பம் மற்றும் சமுதாய பொறுப்புகளை இளைய தலைமுறையினர்களுக்கு விட்டு கொடுத்து விட்டு ஒதுங்கி இருந்து வழிகாட்டுகின்ற சூழலை வானப்ரஸ்தம் என்றும், இறுதியாக இறைவனை தேடி முக்தி அடைகின்ற நேரத்தை சன்யாசம் என்றும் பிரித்தார்கள்.

சமுதாயத்தை தனிமனித வாழ்வை தனித்தனியாக பிரித்ததோடு அல்லாமல் தனிமனிதனுடைய சுபாவம் என்பதும் இப்படி தான் இருக்குமென்று மூன்று வகையாக பிரித்தார்கள். வேகமாக இருக்கும் மனித இயல்பை ராஜசம் என்றும், மந்தமாக இருக்கும் இயல்பை தாமசம் என்றும், நிதானமாக நேர்த்தியாக இருக்கும் இயல்பை சத்வசம் என்றும் பிரித்தார்கள். நமது புராணங்களும், இதிகாசங்களும் உபநிசத சாஸ்திர நூல்களும் இந்த மூன்றுவகை குணத்தை அடிப்படையாக வைத்தே தத்துவங்களை பேசுகிறது. மேலே குறிப்பிட்ட மூன்று வகை இயல்புகளை மனித குணத்திற்கு மட்டுமல்ல. இயற் கையின் இயல்புக்கும் அதாவது பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளின் இயக்கம் தன்மைக்கு இந்த பெயர்களை முதல் முறையாக குறிப்பிட்டு அதன் விந்தைகளை விளக்கி காட்டி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார் கபில மகரிஷி.

பிரகிருதி என்ற உலக பொருள் மீது இந்த மூன்று குணங்களும் சேர்ந்திருக்குமா? பிரிந்திருக்குமா? அல்லது தனித்தனியாக இயங்குமா? என்ற சந்தேகத்தை நாம் எழுப்பினால் மூன்று குணங்களும் எப்போதும் சேர்ந்து தான் இருக்கும். இந்த குணங்கள் என்பது கண்ணுக்கு தெரியாத பொருள் அல்ல. நேரடியாக கண்டு, தொட்டு உணரக்கூடிய வஸ்துவே ஆகும். பிரகருதிக்குள் இவைகள் உடலில் அங்கங்கள் போல பகுதி பகுதியாக பிரிந்து இருக்குகிறது. ஒவ்வொரு குணத்திற்கும் தனித்தனியான விஷேச அம்சங்கள் உண்டு. அறிவு ஒளி மேல்நோக்கி எழும் தன்மைகள் என்பது சத்வ குணத்தின் சிறப்புகளாகும். மனநிறைவு உற்சாகம் எதற்கும் சலிக்காத மனோபாவம் போன்றவைகள் சத்வ குணத்தினுடைய தனித்தன்மைகளாகும்.

ரஜோகுணம் என்பது அதாவது ராஜச தன்மை என்பது தானும் இயங்கி மற்ற இரு குணங்களையும் அதாவது சத்வ, தமாச குணங்களையும் சேர்த்து இயக்கும் தன்மையுடையது. நமது புலன்களின் மீது ஏற்படும் பற்று, காற்று வீசுவது, நெருப்பு நாலாபுறம் பரவுவது, கோபம் வீரம் போன்ற உணர்வுகளுக்கும், உலக துக்கத்திற்கும் இந்த ரஜோகுணமே காரணமாகும். தாமச குணம் என்பது இந்த இரண்டு குணங்களுக்கும் நேர் விரோதமானது ஆகும். அவைகள் இயங்க துடித்தால் இது இயக்கத்தை தடுக்கும். அதாவது சுறுசுறுப்பாக புதிய முயற்சிகளை செய்கிற போது இது முடியாது நடக்காது என்று தடுப்பதற்கு யாராவது முட்டுக்கட்டை வருவார்களே அவர்களை போன்றது தமாச குணம். மந்தம், சோம்பல், சந்தேகம், வீண் விவாதம் இவைகள் இந்த குணத்தின் வடிவங்கள்.

இப்படி திரிசூலங்கள் போல ஒன்றுக்கு ஒன்று சம் மந்தம் இல்லாமல் வெவ்வேறு தன்மைகள் கொண்ட இந்த குணங்கள் பிரகிருதியில் எப்படி ஒன்றாக சேர்ந்திருக்கும். ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருந்தால் பிரகிருதியில் செயல் என்பது எப்படி நடக்கும் என்ற கேள்விகளை கேட்க வேண்டிய அவசியமே இல்லை. காரணம் இதற்கான பதிலை கபிலர் தெளிவாக வைத்திருக்கிறார். இந்த மூன்றும் சேர்ந்திருந்தால் தான் செயல் என்பதே நடைபெறும். இவை இணைந்து செயல்பட்டாலும், ஒன்றே ஒன்று எதிர்த்து கொண்டு தான் இருக்கும் என்கிறார். இதை நவீன கால அணுக் கொள்கையோடு ஒப் பிடலாம். அணுவை தனியாக பிளக்கும் போது அதனுள் எலக்ட்ரான், நியூட்ரான், புரோட்டான் என்பவைகள் இருக்கிறது அல்லவா? அதுவும் பிரகிருதி இயக்கம் கொள்கையும் ஒன்று தான் பிரகிருதியில் இணைந்திருக்கும் இந்த மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று துணையில்லாமல் இயங்க முடியாது அதனால் இவைகளை பிரிக்கவும் முடியாது. இந்த மூன்றும் இல்லாத பொருட்களே உலகத்தில் இல்லை என்று சொல்லலாம். வேண்டுமானால் ஒவ்வொரு பொருளிலும் அதனுடைய தன்மைகளுக்கு ஏற்ப இந்த குணங்கள் கூடியோ குறைந்தோ ஒவ்வொரு விகிதத்தில் இணைந்திருக்கும். எந்த பொருளிலும் இந்த குணங்கள் சமமான நிலையில் இருக்காது. அதனால் தான் இயற்கையாக உலகில் நாம் காணுகிற ஒவ்வொரு பொருளும் ஒன்றுக்கொன்று சம்மந்தம் இல்லாமல் வெவ்வேறு விதத்தில் இருக்கிறது.

எதற்காக அப்படி மூன்று பொருளும் சமம் இல்லாமல் கூடி குறைந்து ஏற்ற தாழ்வுகளோடு இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் சமநிலையில் ஏன் அமைய கூடாது? என்ற கேள்விக்கு கபிலர் தருகிற பதில் பிரமிப்பை ஏற்படுத்தும். அவர் இந்த உலகம் உலகமாக படைக்கப்படுவதற்கு முன்பு எப்படி இருந்தது என்பதிலிருந்து தனது பதிலை தருகிறார். உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு இந்த முக்குணங்கள் ஒன்றுக்குள் ஒன்று கலக்காமல் தனித்தனியாக சமநிலையிலேயே இருந்தது. எப்போது இந்த சமநிலையானது கலைந்ததோ அப்போதே உலக சிருஷ்டி என்பது துவங்கிவிட்டது. அதாவது முக்குணங்களின் கலப்பே "படைப்பு" என்பது கபிலரின் வாதம்.

பிரகிருதியில் குணங்கள் சமநிலையில் இருக்கும் நேரத்தில், சத்வ குணம் என்பது மேலோங்கி நின்றால் அதிலிருந்து புத்தி தோன்றுகிறது. புத்தியிலிருந்து அகங்காரம் கிளைபோல் வளரத் துவங்குகிறது. அகங்காரத்தின் உள்ளே மூன்று குணங்களின் சங்கமிப்பு மூன்று வகையாக பிரிகிறது. அவற்றில்



சத்வ குணம் மேலோங்கும் போது மனம், வாய், கண், மூக்கு போன்ற ஞானேந்திரியங்களும் கை, கால் போன்ற செயலுக்கான இந்திரியங்களும் தோன்றுகிறது. தாமச குணம் மேலோங்கி நிற்கும் பிரிவிலிருந்து பஞ்ச பூதங்களின் மூல பொருட்கள் தோன்றுகிறது. இதிலேயே தாமச குணத்தின் அழுத்தம் அதிகரிக்கும் போது காற்று, நீர், நெருப்பு போன்ற ஐம்பூதங்கள் தோன்றுகிறது. இப்படி கபிலர் சுமார் இருபத்தி ஐந்து வகையாக மூலப்பொருட்களின் தத்துவங்களை விவரிக்கிறார்.

முக்குணங்களின் சேர்க்கையால் உலகமானது உருவாவது போல, முக்குணங்கள் சமநிலைக்கு மீண்டும் திரும்புகிற போது உலக அழிவு என்பது துவங்கிவிடுகிறது. உலகம் அழிந்து போனாலும், பொருட்கள் எல்லாம் சிதைந்து போனாலும், இந்த முக்குணங்கள் தங்களது சுய இயக்கத்தை விடுவதே இல்லை. ஒருபோதும் அது ஓய்ந்து இருப்பது இல்லை. அப்படி ஓய்வு இல்லாமல் குணங்கள் இயங்கி கொண்டு இருப்பதனால் தான் சிருஷ்டியும், பிரளயமும் மாறி மாறி வந்து போய்க்கொண்டே இருக்கிறது. இப்படி பிரகிருதி என்கிற உலகம் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கிறது என்று சொல்வதோடு கபிலர் நிறுத்திக் கொள்ளலாமே பிறகு எதற்காக புருஷன் என்று புது வகையான தத்துவத்தை கபிலர் பேசுகிறார் என்ற சந்தேகம் சாதாரணமாக எழக்கூடும் அதற்கான பதிலையும் கபிலரே தருகிறார்.




இந்த உலகத்தில் நமது கண்ணில் படுகின்ற பொருட்கள் அனைத்துமே நாம் அனுபவிப்பதற்காக உள்ளவைகளே ஆகும். ஒரு பொருள் தன்னைத் தானே அனுபவித்துக் கொள்ள இயலாது. ஒரு நாற்காலி இருக்கிறது அதன் மீது அந்த நாற்காலியை உட்கார முடியுமா? ஒரு கார் இருக்கிறது அந்த காரை அதுவே ஓட்ட முடியுமா? ஒரு ஆடை இருக்கிறது அந்த ஆடை தன்னைத் தானே அணிந்து கொள்ள முடியுமா? முடியாது. நாற்காலியில் உட்காரவும், காரை ஓட்டவும், ஆடையை அணியவும் ஒருவன் இருந்தாக வேண்டும். படுக்கை என்று இருந்தால் அதில் படுப்பவனும் இருக்கவேண்டும் அல்லவா? அதே போலதான் ஒரு பொருள் உண்டென்றால் அதை ஆண்டு அனுபவிக்க ஒரு உயிர் கண்டிப்பாக தேவை.

பிரபஞ்சத்தில் காணுகின்ற மரம், மயில், மலர் இவைகளை கண்டு, தொட்டு ரசித்து மகிழ்வதற்கு யாரும் இல்லை என்றால், அவைகளின் சிருஷ்டியால் எந்த பயனும் இல்லை. எனவே இருக்கும் பொருளை அனுபவிக்க ஒருவன் தேவை அப்படி அனுபவிக்கும் உயிர், அனுபவிக்கும் அறிவு ஒன்றினுடைய பெயர் தான் புருஷன் என்பது. புருஷன் என்பதற்கும், உயிர் என்பதற்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. உயிர் என்றவுடன் கபிலர் மனித உயிர்களை மட்டும் தான் குறிப்பிடுகிறார் என்று நாம் நினைத்தால் நம்மைவிட சிறந்த மூடர்கள் உலகில் யாரும் இருக்க முடியாது. யானையும், மண்புழுவும், பன்றியும் கூட மனிதர்களை போலவே உலகை அனுபவிக்க உரிமை உள்ள பிறவிகளாகும்.

புருஷன் என்றால் என்ன? அதாவது உயிர் என்றால் என்ன? என்ற கேள்வி மிகவும் சுவாரஸ்யமானது. நமக்கு தாங்க முடியாத துயரம் வருகிறது. மிகப்பெரிய பாறை சின்னஞ்சிறிய செடியை நசுக்குவது போல நம்மை துன்பம் என்பது அசைய முடியாமல் ஆட்கொள்கிறது அப்போது நாம் என்ன நினைக்கிறோம் இதிலிருந்து விடுபட்டு எங்காவது போய்விடலாமே தப்பிக்க முடியாதா? அதற்கு வழி இல்லையா? என்று கருதுகிறோம். மேலும் நமது சரீரத்தில் தாங்க முடியாத வேதனையும், நோயும் வாட்டி வதைக்கும் போது இந்த உடம்பை விட்டு விட்டே ஓடி விட முடியாதா? என்று கருதுகிறோம். எப்போது உடலை விட்டு ஓட வேண்டுமென்று எண்ணம் வருகிறதோ அப்போதே இந்த உடலுக்குள் வேறொன்று இருக்கிறது அது தான் ஓட நினைக்கிறது என்பது தெளிவாகிறது. அப்படி ஓட நினைப்பது புருஷன் என்ற உயிர் ஓடாமல் ஒரே இடத்தில் கட்டிப்போடுகின்ற பிரகருதி என்பது உடல்.

முக்குணங்களால் பிரகருதி, அதாவது உடல்கள் உண்டாகின்றன. புருஷன் என்ற உயிர் எதிலிருந்து தோன்றுகிறது என்ற கேள்வி கேட்டால் அதற்கு மிகவும் உச்சமான பதிலை கபிலர் தருகிறார். இந்த பதிலால் தான் கபிலரின் தத்துவம் தத்துவங்களுக்கெல்லாம் மகுடம் என்று வர்ணிக்கப்படுகிறது. புருஷன் என்று சொல்லப்படுகிற உயிர் எதிலிருந்தும் தோன்றவில்லை. யாரும் இதை உற்பத்தி செய்யவும் இல்லை. இது எப்போதும் இருக்கிறது. இதற்கு துவக்கம், முடிவு என்பதெல்லாம் கிடையாது. பிரகிருதியை போலவே, புருஷனும் நித்திய பொருள்தான்.

புருஷன் என்ற இந்த உயிர் பஞ்சபூதங்களின் செயற்கையான உடலோடு சேராமல் தனியாக இருந்து இயங்கும் போது அறிவுமயமாக இருக்கிறது. அதே நேரம் எங்கும் இது வியாபித்து இருக்கும். இதன் தனியான இயக்கம் என்பது இயக்கம் இருப்பது என்றே கூறலாம். ஆனால் பிரபஞ்சத்தோடு புருஷனை காணுகிற போது அது இயங்குவது போல் தெரியும். இந்த இயக்கம் முழுக்க முழுக்க பிரகிருதியில் தான் நிகழ்கிறதே தவிர, புருஷனில் இல்லை. புருஷனின் மிக முக்கிய நோக்கம் பிரகிருதியை அனுபவிப்பது ஒன்றுதான். அதாவது அது உடலை இயக்குவது இல்லை. உடல் பிரகிருதியின் கலவை என்பதனால், அதனுள் புருஷன் வேரூன்றி இருப்பதனால் இயங்குகிறது. ஆனால் சுத்தமான ஜீவன், அதாவது புருஷன் உடலோடு கலக்காமல் உடல் இயக்கத்தால் வரும் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது.



ஆன்மிகமலர் மெயில் புக்



புருஷன் நித்தியமானது, பவித்திரமானது ஸ்படிகம் போன்றது என்றால் அது ஏன் உடல் இயக்கத்தால் வருகின்ற இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும். அதாவது உடலின் தாக்கம் புருஷனை ஏன் தொட வேண்டும்? பந்தப்படுத்த வேண்டும் என்றால் புருஷன் புருஷனாக இருக்கும் வரையில் அதற்கு எந்த சிக்கலும் இல்லை. அது பிரகிருதியோடு அதாவது ஜடப்பொருளோடு சேருகிற போது அதற்கு அனுபவம் என்பது ஏற்படுகிறது. புருஷனும் செயலை அனுபவிக்க துவங்குகிறது. செயல் இல்லாத புருஷனும் செயல்பட்டுக்கொண்டே இருக்கின்ற பிரகிருதியும் இரண்டு துருவங்கள் போன்றது. ஒன்று எண்ணெய் என்றால், இன்னொன்று தண்ணீர் போன்றது. இவை இரண்டும் எப்படி ஒன்று சேர முடியும்? ஒருங்கிணைந்து செயலாற்ற முடியும்?

உடம்பால் நகர முடியாத கால், கைகளை இயக்க முடியாத ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனால் இயங்கத்தான் முடியாதே தவிர சிந்திக்க முடியும். அறிவை வளர்த்துக்கொள்ள முடியும். புத்திசாலித்தனமாக வாழவும் முடியும். அதே போன்றது தான் புருஷன் என்பது. கண்களால் பார்க்க முடியாத இருட்டுக்கும், வெளிச்சத்திற்கும் வித்தியாசம் தெரியாத ஒருவன் இருக்கிறான் அவன் தான் பிரகிருதி என்று வைத்து கொள்வோம். கண்கள் தெரியாதவன் நடக்க முடியாதவனை தூக்கி கொண்டு நடந்தால் நடக்க முடியாதவன் கண்தெரியாதவனுக்கு வழிகாட்ட முடியும் அல்லவா? இதே உதாரணம் தான் புருஷனுக்கும், பிரகிருதிக்கும் உள்ள உறவாகும். இந்த உறவின் தொடர்பால் தான் பிரபஞ்சம் என்பது நடந்து கொண்டிருக்கிறது.

மகா ஞானியான ஆதிசங்கரர் குறிப்பிட்ட பிரம்மம் என்பதும், கபிலர் குறிப்பிடும் புருஷன் என்பதும் ஏறக்குறைய ஒன்று போல் நமக்கு தோன்றுகிறது. பிரம்மம் என்பது மாயையோடு சம்மந்தப்படுகிற போது உலகம் போல தோற்றம் அளிக்கிறது என்பது தான் அத்வைதத்தின் மையக் கோட்பாடு. கபிலர் உருவாக்கிய இந்த சாங்கிய தத்துவமும் ஏறக்குறைய இதே போன்று தானே பிரபஞ்ச உற்பத்தியை காட்டுகிறது என்று மீண்டும் மீண்டும் நமக்கு தோன்றினால் அதில் வியப்படைவதற்கு எதுவுமில்லை. ஆனால் ஒன்று நிச்சயம் அத்வைதம் பிரம்மா உலகம் போல தோற்றம் அளிக்கிறதே தவிர அது உலகமாக மாறிவிட வில்லை என்று கூறுகிறது. ஆனால், சாங்கியம் உலகமென்பது மாயை தோற்றம் அல்ல. உண்மையான வடிவம் என்று கூறுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தோடு அத்வைதம் பிரம்மா என்பது ஒன்றே ஒன்று தான் என்று கூறுகிறது. ஆனால், கபிலர் புருஷன் ஒன்று அல்ல பல என்று சொல்கிறார். அது எப்படி என்று இப்போது பார்ப்போம்.

ஆதிசங்கரரை போல் கபிலரும் ஆத்மா ஒன்று என்று கூறிவிட்டால் அவருடைய கொள்கைக்கு பலவிதமான சிக்கல்கள் வரும். ஒன்றான ஆத்மா பல உயிர்களாக பிரிகிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையும் வரும். இந்த சிக்கல்களை கடப்பதற்கு புருஷன் ஒன்று அல்ல. பல என்ற முடிவுக்கு தான் வந்தாக வேண்டும். மேலும் ஆத்மா ஒன்று தான் என்றால் உலகத்திலுள்ள உயிர்களின் இயக்கம் அனைத்தும் ஒன்று போலவே அமையவேண்டும். ஆனால் யதார்த்தமான பார்வையில் ஒற்றுமையான தோற்றம் என்பது இல்லை. எல்லா உடலிலும் ஒரே உயிர் இருக்குமே ஆனால் ஒரே நேரத்தில் அனைத்து உடம்புகளும் ஒரே உணர்வுக்கு ஆட்பட வேண்டும். ஒரே செயலை செய்ய வேண்டும். ஆனால், ஒவ்வொரு உயிரும் வெவ்வேறுவிதமான தோற்றத்திலும் வெவ்வேறுவிதமான சிந்தனையிலும் அமைந்திருகிறது. அதனால் உயிர் ஒன்றல்ல பல என்று கபிலர் நடைமுறை முடிவிற்கு வருகிறார்.

உயிர் ஒன்று தான் பலவாக தெரிகிறது முடிவுக்கு கபிலர் வந்தால், இன்னும் பல கேள்விகளுக்கு அவர் விடை சொல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆட்படுவார் பிரகிருதியும் புருஷனும் வேறு வேறு ஆயினும், இரண்டும் அனாதியான காலம் தொட்டே இருப்பது யாரும் அவைகளை உற்பத்தி செய்யவில்லை என்றால் இதில் பிரகிருதி என்பது சிறப்பனதா? புருஷன் என்பது சிறப்பனதா? என்று கேட்க தோன்றும். ஆனால் கபிலர் இரண்டுமே சமம் என்கிறார். ஒன்றை ஒன்று மீறியது இல்லை ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை என்கிறார்.

உலகத்தின் இயக்கத்தில் நாம் காண்பது பல உயிர்கள் தளையிலிருந்து விடுபட்டுக்கொண்டே இருக்கிறது. கணக்கில் அடங்காத புது உயிர்கள் வந்துகொண்டே இருக்கிறது. இப்படி பிரகிருதி செயல்பட்டு கொண்டே இருக்கிறது. அதற்கு ஓய்வு என்பதே கிடையாது. அது ஒரு நாள் நின்று போய் மகா சூன்யமாக ஆகப்போவதும் இல்லை. பிரளயம் அதாவது அழிவு என்பது ஒன்று போய் இன்னொன்று வரவு தானே தவிர ஒன்றுமே இல்லை, இருப்பது இல்லை. அதனால் புருஷனை போலவே பிரகிருதியும் நித்தியமானது, சாத்தியமானது, சமமானது.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு கொள்ளவும்
**போன்: 9442426434**

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# பரிகாரங்கள் கூறும் கலப்பு எண்ணை நன்மையா? தீமையா?

திருக்கோவில்களில் மற்றும் வீடுகளில் தற்போது பரிகாரமாக கலப்பு எண்ணெயில் விளக்கு ஏற்வது அதிகரித்து வருகிறது. அந்த வகையில், மூன்று எண்ணெய்களை ஒன்றாக கலந்து, அல்லது ஐந்து எண்ணெய்களை ஒன்றாக கலந்து விளக்கேற்றும் வழக்கம் அதிகரித்தவண்ணம் உள்ளது.

இவ்வாறு விளக்கேற்றுவதால் பல்வேறு இன்னல்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று மக்கள் நம்புவதுடன், அதை மிகுந்த சக்தி வாய்ந்த ஒரு வழிபாடாகவும் நம்பி மேற்கண்ட விளக்குகளை ஏற்றிவருகின்றனர்.

ஆனால் சாங்கிய, சம்பிரதாயப்படி இது முற்றிலும் தவறானது என்று கூறப்பட்டுள்ளது. எப்பொழுதுமே ஒரு எண்ணெய்யுடன் இன்னொரு எண்ணெய் சேர்ந்து எரியக்கூடாது.

ஆனால் பல எண்ணை வழிபாடு என்பது அக்காலத்தில் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த வழிபாடு தற்சமயம் செய்யப்படுவதைப்போன்று பல எண்ணைகளை ஒன்றோடு ஒன்றாக கலக்காமல் தனித்தனியாக விளக்கேற்றி வழிபாடு செய்ததாக கூறப்படுகிறது.

அதர்வன மாந்திரிகத்தில், தனது எதிரிகளை அழிக்கவும், தன் விரோதிக்கு தீங்கிழைக்கவும் தந்திரமாக கையாண்ட முறைதான் கலப்பு எண்ணெய் தீப வழிபாடாகும் . அதே போல் தன் குறைதீரவும். கடுமையான பிரச்சினைகள் விலகவும் பல எண்ணெய் கொண்டு தீபம் ஏற்றும் வழக்கமும் இருந்தது, இந்த வழக்கம்தான் இன்று தவறாக கையாளப்படுகிறது,

பௌர்ணமி கழித்து வரும் அஷ்டமி தேய்பிறை அஷ்டமி என்று அனைவருக்கும் தெரிந்ததுதான், இந்த அஷ்டமி கார்த்திகை மாதத்தில் வரும் போது பஞ்ச எண்ணெய் தீபம் கால பைரவருக்கு ஏற்ற வேண்டும்,

இதற்கு பஞ்ச தீபம் என்று பெயர், அதாவது ஐந்து வகை எண்ணெய் கொண்டு ஏற்றப்பட வேண்டும், ஐந்து தனி தனி அகல் எடுத்துக் கொண்டு ஒரு அகல்விளக்கில் நல்லெண்ணெய். இன்னொரு அகல்விளக்கில் இலுப்ப எண்ணெய். மற்றொன்றில் விளக்கு எண்ணெய். அடுத்ததில் பசு நெய். அடுத்த அகல்விளக்கில் தேங்காய் எண்ணெய் ஊற்றி அகல் விளக்கில் மூன்று திரியை போட்டு பைரவருக்கு விளக்கு ஏற்றினால், பல்வேறு தீமைகள் அகலுவதுடன், கெடுபலன்கள் வெகுவாக குறையும் என்று கூறப்படுகிறது.

ஒரு அகலில் ஏற்றிய நெருப்பில் இருந்து இன்னொரு தீபம் ஏற்றக்கூடாது, (ஒவ்வொரு எண்ணெய் கொண்டு எரியும் தீபத்தின் சக்தி வெவ்வேறாகும், ஒன்று இன்னுமொன்றோடு சேரக்கூடாது சக்தி மோதல் உண்டாகும்) இவ்வாறு தனித்தனியாக விளக்கு ஏற்றி வழிபட்டால் பில்லி சூன்யம். வம்பு. வழக்கு. தீரா நோய் இவைகள் அடங்கும்.





# குடும்ப உறவுமுறையும் இந்து மதமும்

வேறு எந்த மதத்திலும் இல்லாத ஒரு பெருமை இந்து மதக் கடவுளுக்கு உண்டு. ஏனெனில் கடவுளை எல்லா விதமாகவும் வழிபடும் தன்மை இந்து மதத்தில் மட்டும் தான்...

1. தாயாக ........................அம்மன்
2. தந்தையாக ..................சிவன்
3. நண்பனாக ..................பிள்ளையார், கிருஷ்ணன்
4. குருவாக ......................தட்சிணாமூர்த்தி
5. படிப்பாக ......................சரஸ்வதி
6. செல்வமகளாக ............லககஷ்மி
7. செல்வமகனாக ............குபேரன்
8. மழையாக ....................வருணன்
9. நெருப்பாக ....................அகனி
10. அறிவாக ......................குமரன்
11. ஒரு வழிகாட்டியாக......பார்த்தசாரதி
12. உயிர் மூச்சாக .............வாயு
13. காதலாக ......................மன்மதன்
14. மருத்துவனாக.............தன்வந்திரி
15. வீரத்திற்கு ....................மலைமகள்
16. ஆய கலைக்கு.............மயன்
17. கோபத்திற்கு ................திரிபுரம்எரித்தி சிவன்
18. ஊர்க்காவலுக்கு ..........ஐயனார்
19. வீட்டு காவலுக்கு.........பைரவர்
20. வீட்டு பாலுக்கு ............காமதேனு
21. கற்புக்கு.......................சீதை
22. நன் நடத்தைகளுக்கு ..ராமன்
23. பக்திக்கு.......................அனுமன்
24. குறைகளை கொட்ட ....வெங்கடாசலபதி
25. நன் சகோதரனுக்கு .....லக்ஷ்மணன், கும்பகர்ணன்
26. வீட்டிற்கு.......................வாஸ்து புருஷன்
27. மொழிக்கு ....................முருகன்
28. கூப்பிட்ட குரலுக்கு .....கிருஷ்ணன்
29. தா□மத்திற்கு.................கர்ணன்
30. போர்ப்படைகளுக்கு......வீரபாகு
31. பரத்திற்கு ......................நடராசன்
32. தாய்மைக்கு ..................அம்பிகை
33. அன்னத்திற்கு .............அன்ன பூரணி
34. மரணத்திற்கு ................யமன்
35. பாவ கணக்கிற்கு.........சித்திரகுப்தன்
36. பிறப்பிற்கு .....................பிரம்மன்
37. சுகப் பிரச்வத்திற்கு ......கர்ப்ப ரட்சாம்பிகை

Anita Rajesh Pandiyan
Chembur, Mumbai

Talks With Thali

# ஆ(ம)ஹா பாரதம் 4

பாகம் - பாகம் - பாகம் - பாகம்

ஆயோததௌம்யரின் 2வது சீடரான உபமன்யுவை பசுக்களை காக்கும் சேவையை செய்யும்படி சொல்லியிருந்தார் அவரது குரு. அவனும் செய்து வந்தான். அவன் புஷ்டியாக இருப்பதற்கு என்ன காரணம் என குரு கேட்க; தான் பிக்ஷையெடுத்து உண்பதாக கூறினான்.

எனக்கு அர்ப்பணிக்காமல் நீ எதையும் சாப்பிடக் கூடாதென்றதும் அப்படியே செய்தான். அப்படி இருந்தும் புஷ்டியாக இருக்க காரணம் கேட்டார் குரு.முதல் பிக்ஷ உங்களுக்கு, 2வது பிக்ஷ எனக்கு என்று உண்கிறேன் என்றதும், அதுவும் கூடாதென்றார் குரு. அப்படியும் புஷ்டியாக இருக்க காரணம் என்னவென்று கேட்க பாலை மட்டும் குடிக்கிறேன் என்றான். அதுவும் கூடாதென்றார்.

அதன் பிறகும் புஷ்டியாக இருக்க காரணம் என்ன என்று கேட்க, கன்று பால் குடிக்கும் போது கீழே சிந்தும் பால் நுரையை மட்டும் குடிப்பதாக சொல்ல அதுவும் கூடாதென்றார் குரு. அப்படியே ஆகட்டும் என்றவன் பசுக்களை மேய்த்துக் கொண்டு போன போது பசியின் காரணமாய் எருக்க இலைகளை தின்று விட அதனால் பார்வை இழந்து ஒரு கிணற்றில் விழுந்து விடுகிறான்.



மாலை நேரமாகியும் உபமன்யு வராததை கண்டகுருவானவர் அவனைத் தேடிக்கொண்டு சென்றவர் வழியெங்கும் மகனே எங்கிருக்கிறாய். என குரல் கொடுத்துக் கொண்டே போனார். ஓரிடத்திற்கு வந்ததும் உபமன்யு பதில் குரல் கொடுத்தான், என்ன நடந்தது என்று குரு கேட்டதும் நடந்தவைகளை அப்படியே எடுத்து சொல்லி முடித்தான.

அதற்கு குரு தேவ வைத்தியர்களான அசுவினி குமாரர்களை வேண்டிக் கொள். அவர்கள் உன்னை பூரணமாக குணப்படுத்துவார்கள் என் று பதிலுரைத்தார்.

உபமன்யுவும் அவர்களை பலவாறாகப் புகழ்ந்து துதித்திட; அவர்கள் உபமன்யு முன் தரிசனம் தந்து “இதோ இந்த மருந்தினை சாப்பிடு” என்றனர்.

குருவிற்கு அர்ப்பணிக்காமல் நான் சாப்பிட மாட்டேன் என்றான். “உன் குருவும் இதற்கு முன்பு இதே போல் சிக்கிக் கொண்டார். அப்போது அவர் அவரது குருவிற்கு அர்ப்பணிக்காமல் தான் சாப்பிட்டார். எனவே நீயும் சாப்பிடு” என்றனர். அதை மறுத்து விட்டான் உபமன்யு .

அசுவினிக் குமாரர்கள் மிக மகிழ்ந்து நீ பூரண நலம் பெறுவாய் என்று ஆசீர்வதித்து மறைந்தனர் கண்கள் முன்பு போல பிரகாசித்தன. உபமன்யு குருவை வணங்கிட குருவானவர் “உபமன்யு வேத சாத்திரங்கள் அனைத்தும் உனது அறிவில் தானாகவே வந்துதிக்கும்” என மிக மகிழ்ந்து ஆசி கூறினார்.

ஒரு குருவானவர் தனது சீடர்களை எப்படியாவது மேல்நிலைக்கு அழைத்துச் செல்ல பாடுபட வேண்டும். தன் பக்கத்திலேயே காலா காலமும் வைத்திருந்து அவனை முழுக்க சோம்பேறியாக்கிவிடக்கூடாது.அப்படி அவனை மேன்மைக்கு அழைத்துச் செல்ல பாரபட்சமின்றி வழி நடத்த வேண்டும்.

இவன் மிகவும் நல்லவன் அதனால் இவன் நம் பக்கத்திலேயே இருக்கட்டும் மற்றவர்கள் ஓடி ஆடி அதிகமாக வேலை செய்யட்டும் எனும் எண்ணம் ஒரு குருவின் மனதில் எழுந்து விட்டால் சீடர்களின் எதிர்காலம் இருள் மயமாகி விடும்.

தன்னிடம் கல்வி கற்று மேன்மையடைய வந்தவர்களை வயலுக்கு அனுப்புவதும், மாடுகளை மேய்க்க சொல்வதும் வீட்டு வேலை செய் என்பதெல்லாம் இக்கால பார்வைக்கு ஒத்து வராத ஓர் அரிய நி்ழ்வு. . அக் காலத்தில் அது தான் மிக இயல்பு நிலையில் நிலவி வந்தது.



எல்லாம் அறிந்தவன் என் ஆசிரியன் ஆதலால் அவன் சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் ஓராயிரம் பொருள் நிறைந்திருக்கும் என்பது அன்றைய மாணவர்களின் ஆணித்தரமான (நம்பிக்கை) கருத்தாக இருந்தது.(ஆசிரியரும் அப்படி இருந்தனர்).

குருவை விமர்சிக்குமளவு சீடனும், ஆசிரியருக்கு பாடம் சொல்லும் மாணவனும் அதிகமாய் முளைத்தெழாத காலம் அது. சகல வித்தைகளிலும் தேர்ச்சிப் பெற்றவராய் இருந்தாலும் குரு என்பவர் மிகவும் சாதாரணமாகவே காட்சியளித்தனர்.

உபமன்யு பட்டினி கிடந்து சாக வேண்டும் என்பதல்ல குருவின் எண்ணம். பட்டினி கிடக்கும் சூழ்நிலை வரும் போது அதை எப்படி எதிர்கொள்வான் என்பதற்கான முன்னோட்டத் தேர்வு அது.

குணப்படுத்தும் திறன் குருவாகிய தன்னிடம் இருக்கலாம் (இருந்தது) ஆனால் வாழ்நாள் முழுதும் சீடன் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதால் உன் தேவைக்கு நீயேவேண்டிக் கொள். உன் தேவையை நீயே பூர்த்தி செய்துக் கொள் என்று தன்னை விலக்கிக் கொண்டார்.

உபமன்யு பூரண நலம் பெற்றப் பிறகு அவனை ஆசீர்வதிக்கும் போது வேத சாத்திரமனைத்தும் உன்னை தானாக வந்தடையும் என்கிறார். இதே ஆசியை நீ பூரண நலம் பெறுவாய் என்றும் கூறியிருந்தால் அவன் அவர்களைத் துதித்து நலம் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லையே?

குரு குருவாகவே இருக்க வேண்டும். சித்து விளையாட்டு, மாந்திரிக செயல் போன்றவைகளை செய்து தன்னை தானே இழிநிலைக்கு செல்லும் அவல நிலைக்குத் தள்ளிவிடக் கூடாது. முன்னுதாரணமாய் இருக்க வேண்டியவர் அந்த நிலையிலேயே இருக்க வேண்டும்.

எளிமை தான் வலிமை என்பதை தன் எளிமையால் தான் ஒரு குருவானவர் நிரூபணம் செய்து காட்ட முடியும். அப்படித்தான் அன்பெனும் இருக்கமானப் பிடிக்குள்ளே பாரபட்சமெனும் தளர்வின்றி ஆயிரமாயிரம் விதைகளை முளைத்தெழச் செய்தார்கள் அக்கால குருமார்கள்.

அந்த நாளும் வந்திடாதோ ........?

அடுத்த இதழில் பார்ப்போம்...

- Thali, Ph:9600999279



# யாரெல்லாம் ஒரு (ஏக) உருத்திராட்சம் அணியலாம்? அணிவதால் உண்டாகும் பலன்கள்

- தீட்சை பெற்றவர் பெறாதவர் என அனைவரும் அணியலாம்
- ஆண் பெண் பாகுபாடு இல்லாமல் எல்லா வயதினரும் எல்லாக்காலத்தும் அணியலாம்
- மது மாமிசம் அறவே சாப்பிடக்கூடாது .அதன் புனிதம் காக்கப்படவேண்டும்
- தாம்பத்தியம் செய்ய இல்லற வாழ்க்கைக்கு தடை எதுவும் இல்லை
- பெண்கள் மாதவிலக்கு பிறப்பு இறப்பு தீட்டு என்று எந்த கட்டுப்பாடுகளும் கிடையாது ஏனெனில் இவையெல்லாம் மனிதபிறவியில் உண்டான இயற்கை நிகழ்வுகளே ஆகும்
- வியாதி உள்ளவர்கள், குழந்தைகள், மன நோய்க்கு ஆட்பட்டவர்கள், நரம்பு, வலிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் அது சம்பந்தமான நோய்கள் என சகல நோய் பீடித்தவர்களுக்கும் மிக சிறந்த வைத்தியமாகும்
- பில்லி ஏவல் சூனியம் பேய் பிசாசு தந்திரம் மந்திரம் எந்திரம் கண் திருஷ்டி போன்ற எதுவும் உருத்திராட்சம் அணிந்தவர்களுக்கு வேலை செய்யாது.
- சிவப்பு கயிற்றில் கோர்த்து கழுத்தில் கண்டத்தில் படுமாறு அணிய வேண்டும்
- குளிக்கும்போது உருத்திராட்சம் அணிந்து குளித்தால் கங்கையில் குளித்த பலன் உண்டு
- ஒரு முறை அணிந்தால் வாழ்நாள் முழுக்க அணிந்திருக்க வேண்டும். மரணத்தின் போது எமகணங்கள் நம்மை நெருங்காது. சிவகணங்கள் வந்து கொண்டு செல்வார்கள் அதனால் நரகம் கண்டிப்பாக இல்லை.
- ஆலய வழிபாட்டின் போதும் சிவபூசையின் போதும் கண்டிப்பாக உருத்திராட்சம் அணிய வேண்டும் அதில் உள்ள மின் காந்த ஆற்றல் நமக்கு இறைவனை நெருங்கி இழுத்து வரும் காந்தம் இரும்பை ஈர்ப்பது போல இறை சக்தியை ஈர்த்து தரும்.

# கஷ்டங்களைத் தீர்க்க உதவும் தீப வழிபாட்டு முறைகள்

ஒவ்வொரு செவ்வாய்கிழமை காலையும். மாலையும் ஸ்ரீ கால பைரவரை அஷ்டலட்சுமியும் வழிபட உகந்த நேரமாகும், அந்த நேரத்தில் கடன் தீரவும். செல்வம் பெருகவும் இரு அகலில் நெய்தீபம் ஒன்றிலும். நல்லெண்ணெய் ஒன்றிலும் ஊற்றி சிவப்பு திரி போட்டு தனித்தனியே ஏற்றினால் கஷ்டங்கள் தீரும்,



நவகிரக தோஷம் விலக அரசடி விநாயகருக்கு சதுர்த்தி திதி அல்லது ஞாயிற்றுக்கிழமை மூன்று அகலில் ஒவ்வொன்றின் வீதம் தேங்காய் எண்ணெய். நல்லெண்ணெய். பசு நெய் இவைகளை தனித்தனியே ஏற்றி வழிபட கிரக தோஷம் விலகும்.

சித்திரை. ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் கிழமையில் ராகுகால வேளையில் சிவாலயத்தில் உள்ள அன்னை துர்க்கைக்கு 9 அகலில் 9 வகை எண்ணெய் தனித்தனியே ஊற்றி 9 வகை கலர் திரி ஒவ்வொன்றிலும் ஒரு கலர் திரி வீதம் போட்டு தீபம் ஏற்றி அன்னையை வழிபட தீரா பிரச்சினையும் தீரும்,




## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**


தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# ஓரிதழ் தாமரை..!



மூலிகைகளின் சொர்க்க பூமியான நம் பாரதத்தில் அவதரித்த சித்தர்கள், ஞானி கள், ரிஷிகள், தங்களின் தவப்பயனால் இயற் கையின் கொடையான இந்த மூலிகைகள் மனித இனத்தை எப்படி பாதுகாக்கிறது என் பதை கண்டறிந்து சொன்னார்கள்.

பொதுவாக மனிதர்களைத் தாக்கும் 4,448 நோய்களை அறிந்து அவற்றை மூலிகைகளைக் கொண்டே குணப்படுத்தும் முறைகளையும் கூறினார்கள். மேலும் நோய்கள் வரும் முன் காக்க இந்த மூலிகைகளின் பயன்களையும் கண்டறிந்தனர். உணவின் மூலம் நோய்கள் தாக்காமல் இருக்கவும் வழி வகை செய்தனர். இதனால் நம் முன்னோர்கள் நோயின்றி வாழ்ந்தனர். ஆனால் இன்றோ குழந்தைப் பருவத்திலிருந்தே இனம்புரியாத பல்வேறு நோய்களின் பிடியில் மனித இனம் சிக்கித் தவிக்கின்றது. இடைப்பட்ட காலத்தில் மூலிகைகள் மீது நாம் காட்டிவந்த அலட்சியமே இதற்குக் கார ணம்.

நம் அருகே பரவிக்கிடக்கும் மூலிகைகளை தேவையற்றது என்று எண்ணி அழித்த நாம் இன்று அவற்றின் பயன்களை உணர்ந்து தேடும்போது அவை நம் கண்ணில் அகப்படுவ தில்லை. ஓரிதல் தாமரை என்பது நிலத்தில் வளரும் சிறு செடி வகையாகும்.

இதன் இலை, தண்டு, பூ, வேர், காய் அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டது.

சிலர் உடல் நலம் பேணாமல் இரவு பகல் பாராமல் பொருள் தேடி அலைகின்றனர். அதிக தூக்கமின்மை, நேரத்திற்கு சரியாக உணவு அருந்தாமை போன்ற காரணங்களால் பலரின் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. மேலும் சில தீய பழக்கங்கள் குடிகொண்டு உடல் என்னும் கோவிலை நாசப்படுத்திவிடுகின்றன.

இத்தகைய பாதிப்புகளிலிருந்து விடுபட ஓரிதழ் தாமரை மிகவும் பயனுள்ள மருந்தாகும். ஓரிதழ் தாமரையின் சமூலத்தை நிழலில் உலர்த்தி காயவைத்து பொடி செய்து பாலில் கலந்து காலை, மாலை என இருவேளையும் அருந்திவந்தால் உடல் வலுப்பெறும். நோயின் தாக்கத்திலிருந்து விடுபட்டவர்களுக்கு உடல் தேற ஓரிதழ் தாமரையின் சமூலம் நல்ல மருந்தாகும்.

மேகவெட்டை நோயால் பாதிக்கப்பட்ட வர்கள் ஓரிதழ் தாமரை சமூலம், பச்சை கற்பூரம், கோரோசனை இவற்றை சம அளவு எடுத்து இடித்து பசுவின் நெய்யுடன் கலந்து மேகவெட்டை தாக்கிய பகுதிகளில் பூசி வந்தால் மேகவெட்டை தீரும்.

உடலில் உள்ள புண்களின் மீது தடவி வந்தால் புண்கள் விரைவில் ஆறும்.

சுரக்காய்ச்சலால் அவதியுறுபவர்கள் ஓரிதழ் தாமரையின் சமூலத்தை கசாயம் செய்து அருந்தி வந்தால் சுரக்காய்ச்சல் நீங்கும்.

இரைப்பு நோய்க்கு இது அருமருந்தாகும். உடல் எடை குறைய ஓரிதழ்தாமரை கசாயம் சிறந்தது. தாது நஷ்டப்பட்டு உடல் தேறாமல் நோஞ்சான் போல் காணப்படுபவர்கள் இவர்கள் ஓரிதழ் தாமரையின் சமூலத்தை இடித்து தேன் அல்லது பாலில் கலந்து இரவு படுக்கைக்கு செல்லும்முன் சாப்பிட்டு வந்தால் இழந்த தாதுவை மீட்கலாம். இதனை காயகல்பமாகச் சாப்பிட்டு வந்தால் உடல் வலுப்பெறும்.

– ராம்குமார், சித்த வைத்தியர்

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# தீபாவளி இருளைப் போக்கிட குருவை நாடுங்கள்

ஐப்பசி மாதம் அமாவாசை முன் 2 நாட்களில் இருந்து, அமாவாசையின் அடுத்து இரண்டு நாட்கள் வரை மிகவும் சக்தி வாய்ந்த நாளாக வேத நாட்காட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐப்பசி அமாவாசை தினம் அன்று தீபாவளி கொண்டாப்படுகிறது. வருடத்தின் மிக இருண்ட இரவு அந்நாள். மேல் சொன்ன ஐந்து தினங்களில் நட்சத்திரங்களில் சக்தி பூமியின் மீது பரவலாக இருக்கும். அமாவாசை தினம் அன்று. இந்த சக்திகளில் இருந்து கடவுள்களின் சக்தி ஈர்க்கப்படும். குறிப்பாக மகாலக்ஷ்மி சக்தி மிக பரவலாக இருக்கும்.

பொதுவாக தீபாவளி தினம் அன்று லக்ஷ்மி தேவி படம் முன் விளக்கு வழிபடுவது வழக்கம். அதாவது இருளைப் போக்க விளக்கு ஏற்றி ஒளிரச் செய்வதாக அர்த்தம். தீபாவளியின் அர்த்தம் "தமஸோமா ஜோதிர்கமைய' என்ற ஸ்லோகத்தில் புதைந்துள்ளது. இதன் அர்த்தம் "என்னை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு எடுத்துச் செல்". இங்கு வெளிச்சம் என்பது உள்ஒளி. மாறாக வீட்டில் விளக்கு ஏற்றுவதோ, இல்லை மின் விளக்கு எரிய விடுவதோ அல்ல. எப்போது உள் ஒளி பெருகுகிறது, அப்போது தேவ தேவியர்கள் ஈர்க்கப்படுவார்கள். இந்த விசேஷ நாளில் குறிப்பிட மந்திர உச்சாடனம் செய்யும் போதும், சனாதன் கிரியாவின் மேல் நிலை பயிற்சிகளை செய்யும் போதும் நம்முள் உள் ஒளி பெருகும்.



படைப்பில் இருக்கும் பல வேறு சக்திகள், அதாவது பல ரூபங்களில் நம் வழிபடும் கடவுள்கள் , நம்மை சரியான வழியில் நடத்தி செல்வதற்க்கே உள்ளன. பூமியில் அவர்கள் ஆற்றல் பரவி இருப்பதற்கு வேறு எந்த கார ணமும் இல்லை. ஆ த் ம ா வி ன் உ ண் மை

> அனைத்து புறப் பொருட்களும் தற்காலிகமானவை. அவை உங்களுடன் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே இருக்கும். மீதம் இருக்கும் உங்கள் நேரத்தை சரியாக உபயோகிக்க. இந்த படைப்புக்கு திருப்பி கொடுங்கள். சேவை மற்றும் தொண்டு மூலமாக.

தேவையை பூர்த்தி செய்ய அவர்களை அழைக்கும் போது , அவர்கள் செவி சாய்ப்பர்கள். உள் அனுபவத்தை ஏற்படுத்துவார்கள்.

லக்ஷ்மி தேவி காக்கும் கடவுளின் சக்தி. இவளுக்கு மாயா என்றும் பெயர் உண்டு. செல்வத்தின் கடவுள் ஆனா இவள், புற செல்வத்திற்கும் அதை விட அக செல்வத்திற்கும் இவளே அதிபதி. மன தூய்மையோடும், சரியான வழிபாட்டுடனும் இவளை அழைக்கும் போது, அந்த சாதகருக்கு பொருள் செல்வத்தையும், ஆன்மீக சித்திகளையும் வழங்குவாள். ஆனால் நமது எண்ணம் என்பதில் தெளிவு வேண் டும். பொருள் சேர்ப்பதை விட, ஆன்மீக அனு பவங்களை உள் வாங்கி அதன் மூலம் மேலே உயர வேண்டும்.

மாயா என்பது நம்மை புற பொருட்களோடு கட்டி போடும். காலையில் இருந்து இரவு வரை நம்மை அதில் சிக்க வைக்க முயற்ச்சி செய்யும். ஆசைக்கு எல்லையே கிடையாது. அதில் இருந்து வெளி வந்து நாம் உயர வேண்டும் என்கின்ற எண்ணம் வேண்டும். செல்வங்களை தேட நினைத்து நீங்கள் எவ்வளவு செல்வங்கள் தேடினாலும் உங்களால் தன்னிறைவு பெறவே முடியாது. நீங்கள் தன்னிறைவு பெற முயற்சித்துக் கொண்டே இருக்கும் வேளையில் நீங்கள் உடலை விட்டு பிரிந்து விடுவீர்கள். மீண்டும் இன்னொரு பிறவியில் மறுபடியும் மாயையில் சிக்கிக் கொள்வீர்கள்.

ஒன்றை நீங்கள் மறக்கக் கூடாது, அனைத்து புறப் பொருட்களும் தற்காலிகமானவை. அவை உங்களுடன் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே இருக்கும். அவை உங்களை விட்டு செல்லும் போது உங்களிடம் மிஞ்சி இருப்பது வலி மட்டுமே. நீங்கள் எவ்வளவு சேர்க்கிறீர்களோ, அவ்வளவு மன பாரங்களையும் சேர்த்து வைத்து உள்ளீர்கள். அதை விட மிகவும் வலியை தாங்க வேண்டி இருக்கும்.

இந்த தருணமே தீர்மானித்து விடுங்கள். மீதம் இருக்கும் உங்கள் நேரத்தை சரியாக உபயோகிக்க. உங்கள் புற செல்வங்களின் மீது பற்றை விட்டு, மேல உயர வேண்டும். நீங் கள் சேர்த்து வைத்திருப்பதில் இருந்து இந்த படைப்புக்கு திருப்பி கொடுங்கள். சேவை மற்றும் தொண்டு மூலமாக.

வான் நோக்கி செல்லும் ராக்கெட், மேல செல்ல வேண்டும் என்றால் தன் பின்னால் இருக்கும் தேவை அற்ற சுமைகளை இறக்கி விட வேண்டும். இது நமக்கும் பொருந்தும். தீபாவளியின் முக்கியத்துவம் "எனக்கு மேலும் மேலும் பொருள் தா" என்பதில் இல்லை. "என் தேவைக்கு செல்வம் கொடு, ஆனால் என்னை பற்றில் அகப்படாமல் காத்து ரக்ஷிப்பாய் தேவி. ஏன் என்றால் இவை அனைத்து நிரந்தரம் இல்லாதவை" என்பது தான். நீங்கள் கண்டிப்பாக புற பொருட்களை அனுபவிக்க வேண்டும். அனுபவிக்க கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அதில் பற்றை விடுத்தது அதை அனுபவிக்க வேண்டும். தேவைக்கு மேலும் மேலும் சேர்க்கும் எண்ணம் சரி அல்ல.

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருப்பதை போல, படைபிற்கு இரண்டு பக்கம் உண்டு, அதில் ஒன்று இருண்ட பாதை. அதாவது மாந்த்ரீகம் போன்ற எதிர்மறை சக்திகள். தீபாவளி என்பது வருடத்திலேயே மிகுந்து இருள் சூழ்ந்த நாள். இந்நாளில் செய்யும் மாந்திரீக வித்தைகளுக்கு சக்தி அதிகம்.

இது போன்ற சக்திகளில் இருந்து காத்துக் கொள்ள, நல்வழிகாட்டும் குருவுடன் உங்களை இணைத்துக் கொண்டால், குருவின் சக்தி உங்களை இது போன்ற எதிர் மறை சக்திகளை நீக்கிட உதவும். இந்த தீபாவளியில் இருந்தே உங்களை ஒளிர செய்ய ஆரம்பித்து விடுங்கள்.... வாழ்த்துக்கள்....

– யோகி அஷ்வினி

dhyanfoundation தொடர்புக்கு: 9841430369

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com




www.aanmeegamalar.com





# விவேகானந்தரின் பொன்மொழிகள்..



- கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லை யென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.
- உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.
- செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து; அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.
- வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாய்த்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைதனம்.
- இளைஞர்களே, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.
- பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.
- பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.
- இந்தியாவை முன்னேற்றமடையச் செய்ய விரும்பினால், பாமர மக்களுக்காக நாம் வேலை செய்தாக வேண்டும்.
- பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும்

படித்து மகிழ...

**www.aanmeegamalar.com**

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.